# தமிழ் இலக்கியம் - முதலாமாண்டு
## இரண்டாம் பருவம்
## முதன்மைத்தாள் - சிற்றிலக்கியம்

### அலகு - 1 - உலா
### திருக்கைலாய ஞான உலா

பன்னிரு திருமுறையில் பதினோராம் திருமுறையில் இடம்பெற்றுள்ள நூல்களில் ஒன்று. 96 வகையான சிற்றிலக்கியங்களில் உலா வகையைச் சேர்ந்தது.

சேரமான் பெருமாள் நாயனாரால் இயற்றப்பட்ட இந்நூல் ஆதியுலா எனப் போற்றப்படுகிறது. உலா இலக்கியத்தின் முதல் நூல். மேலும் 'ஆதி' எனப்படும் கைலாய நாதர் உலாவருவதைப் பாடுவதாலும் இது ஆதியுலா என்று கூறப்பட்டது.

இந்நூலில் 197 கண்ணிகள் உள்ளன. சிவபெருமான் வீதி உலா வரும்போது ஏழு பருவப் பெண்கள் அவன்மீது காதல் கொள்வதைப் பற்றி இந்நூல் விவரிக்கின்றது.

1. முழுமுதற் கடவுளின் நுட்பம்

உலகினைப் படைத்த முழுமுதற்கடவுள் சிவபெருமான் முதல்வன் ஆவான். நெருப்பு வடிவில் நின்ற அவனைத் திருமாலும், நான்முகனும் காண முடியாது மக்கம் அடைந்தனர். அவனுக்குப் பெற்றோர் இல்லை. யாரும் படைக்க முடியாது.

Scanned with CamScanner

எல்லா பொருள்களையும் தன்னகத்தே கொண்டு அத்திணைப் பொருள்களிலும் மறைந்தும், வெளிப்படையாகவும் உள்ளான். இயற்கையாகவே ஓங்கியுயர்ந்து இருப்பவன். ஓதிக் கற்காமல் எல்லாவற்றையும் தெளிவாக உணர்ந்தவன். உலகம் நுண்மையானது என்று சொல்லும் அரிய நிலையில் உள்ளவன். எல்லாப் பொருள்களையும் இயற்கையாகவே அணியிடுப்பவன். ஆகவே அவனே முழுமுதற் கடவுள்.

## 2. முத்தொழில் செய்பவன் சிவனே

சிவபெருமானே திருமாலாக வந்து உலகைக் காக்கின்றான். நான்முகனாகி உயிர்களைப் படைக்கின்றான். உருத்திரனாகி பிறவாகங்களை அழிக்கின்றான். மேலும் இக்கடவுள் விண்ணகத் தேவர்கள் அறிய, அறியாத நெருப்பு வடிவமுடையவன். அவன் அன்பர்கள் நினைத்த உருவில் வருபவன். உலகிலுள்ள எவ்வுருவும் இறை உருவே.

சிவலோகமான விண்ணகத்திலே எழில் கொஞ்சும் திருக்கோயில் இருக்கின்றது. அதனுள்ளே சிவக் கடவுள் வீற்றிருக்கிறார். தேவர்கள் கோயிலின் புற-வாயிலில் கூடி, "எங்களுக்குக் காட்சியருள வேண்டும்" என இரந்து ஏங்கி வேண்டிக் கொண்டனர்.

## 3. சிவபுரத்தில் உமையம்மைக்குத் திருமகளும் கலைமகளும் அணிசெய்தல்.

திருக்கோயிலில் திருமகளும், நிலமகளும், கலைமகளும் ஒன்று சேர்ந்து எழில்மிக்க மண்டபத்தை அமைத்தார்கள். அவர்கள் இறைவியான உமையம்மையை மெய்யறிவு ஒளியாகக் கொண்டு, அவளுடைய கூந்தலுக்கு அணிசெய்ய முற்பட்டனர்.

வயந்தன் தொடுத்த மாலையைச் சூட்டினர். சந்தனக் குழம்பை அம்மையின் மார்பகத்தில் பூசினர். கற்பகமரம் தந்த பட்டுப் புடவையை உடுத்தினர். திருவடிகளில் பொற் சிலம்புகளை அணிவித்தனர். தலையில் வளைந்த சூளாமணியைக் கவித்தனர்.

நெற்றியின் நடுவில் 'நெற்றிச் சுட்டி' என்னும் அணியைத் தொங்கவிட்டனர். காதுகளில் குண்டலங்களை அணிந்தனர். மேலும்பல அணிகலன்களை அணிவித்து அழகு செய்தனர்.

## 4. தேவர்கள் பல்லாண்டு இசைத்தல்

உலா புறப்படும் முன்பே வசுக்கள் எட்டு பேரும், ஏழுவகையான முனிவர்களும், ஒளிசிறந்த செஞ்சுடர்க் கதிரவரான பன்னிரண்டு ஆதித்தரும் வந்து பல்லாண்டு பாடினர்

# 5. உலாப் புறப்பாடு

அருள் உள்ளம் கொண்ட உமையை அணிசெய்து வீற்றிருக்கவும், கைலைச் சிவபெருமான் புன்முறுவல் பூக்கவும், எல்லோரும் வாழ்த்தினார்கள்.

நறுமணப் புகை கமழவும், இன்னிசைக் கருவிகள் முழங்கவும், இறைவன் காளை மேல் அமர்ந்து உலா புறப்படுகின்றார்.

அகத்தியன் யாழினை மீட்டவும், தீயான தேவன் நறுமணப் புகை வட்டிலை ஏந்தவும், யமன் மங்கல மொழிகளால் வாழ்த்துரை வழங்கவும், நிருதி குலத்தோர் கண்ணாடிகளை ஏந்தி வரவும், வருணன் நீர்க் கலயங்களைத் தாங்கி வரவும், காற்றுத் தேவன் வீதிகளைத் தூய்மை செய்யவும், நிலா குடையை ஏந்தி வரவும்,

வடகிழக்குத் திசைக் காவலனான ஈசானன் வெற்றிலைப் பாக்குப் பையைத் தூக்கி வரவும், அசுவினித் தேவர்கள் மந்திரத்தால் வாழ்த்துரை சொல்லவும், குபேரன் வழியெல்லாம் செல்வங்களைச் சிந்திச் செல்லவும், கங்கை, யமுனை ஆறுகள் தமது தீர்த்தங்களைக் கவரியில் நனைத்து எங்கும் தெளிக்கவும், மேகங்கள் வான்வெளியில் விதானப் பந்தல் போடவும், பலவகையான வாத்தியங்கள் முழங்கவும், பெண்கள் நடனமாடவும், தேவர்கள் பணிந்து வணங்க பெருமான் வெண்ணிற அழகுடைய இளங்காளை மேல் ஏறி உலா வரப் புறப்பட்டார்.

## உலா முன்னே முருகனும் இந்திரனும் ஊர்திகளில் வருதல்

அரக்கர்களை போரில் அழித்த முருகக் கடவுள் மயில்மேலேறி முன்னே செல்லவும், இந்திரன் யானைமேல் பின்னே வரவும், நான்முகன் அழகுடைய அன்னப்பறவையால் ஊர்ந்து வலப்பக்கம் வரவும், கருடப் பறவைமேல் திருமால் ஏறி இடப்பக்கம் வரவும், காமன் தன் கொடியோடு முன்னே வருவான்.

ஐயனார் அழகிய குதிரையில் ஏறி வருவார். விநாயகப் பெருமானும் வர, ஏழுபெண்கள் புடை சூழ, கொற்றவை சிங்கத்தின் மீது ஏறிச் செல்லவும் பலவகை வாத்தியங்கள் இசை எழுப்ப சிவபெருமான் உலா சென்றார்.

## தவத்தோரும் யோகியரும் சூழ்வந்து மங்கலம் பாடி ஆடினர்.

மங்கல வாழ்த்துப் பாடுவோர் பாட வணங்க, சிலர் நடனமாட அனைவரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்துகின்றனர். அறிவுடைய உண்மையியல் கற்ற ஆன்றோரும், வானிலே சுற்றித்திரியும் 'வாலகில்லியர்' என்ற முனிவர்களும் சிவபுரத்தில் சூழ்ந்து வைழனர்.

## தவத்தோரும் பெரிய முனிவர்களும் சிவத்தந்தையைப் போற்றி வழிபடுதல்

இமையாத விழிகளையுடைய தேவர்கள் வணங்கும் பெருங்கடவுளே வணக்கம். உமையவளின் மணவாளனே வணக்கம். தீயைக் கையிலே ஏந்தி அழித்தல் தொழிலை உணர்த்தித் கூத்தினை ஆடுகின்ற இறைவனே வணக்கம். தாயாகவும், தந்தையாகவும் திகழ்பவனே வணக்கம்.

Scanned with CamScanner

தூய ஒளி வடிவான சங்கரனே வணக்கம். பொன் கதிர்ச் செஞ்சடை முடியுடைய கடவுளே வணக்கம். கழலணிந்த திருவடியே போற்றி. அர்ச்சுனனுக்கு பாசுபதம் அம்பைக் கொடுத்த இறைவனே வணக்கம். எலும்பு மாலையை அணிந்த இறைவனே போற்றி. தேவர்களுக்கெல்லாம் அருள்தரும் இறைவடிவே போற்றி. பழம்பொருளாய் இருந்து அருள் புரிபவனே போற்றி! போற்றி! எனப் பூ மழை பொழிந்தனர். அப்பொழுது சிவபெருமானுக்குரிய பொருட்களைத் தொண்டர்கள் எடுத்து வந்தனர். இத்தகைய வேளையில் சிவபெருமான் உலா வந்தார்.

## மாட மாளிகையில் ஏழு பருவப் பெண்களும் தலைவனைக் கண்டு மயங்கிப் பேசி அறிவிழந்தனர்.

இந்திரனின் படைமுழக்கத்தைக் கேட்ட அளவிலே, காளை ஊர்தியில் சிவக்கடவுள் வருகிறாரென்று பருவப் பெண்களெல்லாம் உணர்ந்தார்கள். கங்கை நீரைத் தலையால் தாங்கியும், பிறைநிலாவைச் சடையிலே சூடியும், சூலத்தைக் கையால் பிடித்தும், தூய வெண்ணீறு அணிந்தும், யானைத் தோலைப் போர்த்தியும் அடையாளம் காட்டி வருகின்றவர் சிவனே எனக் கருதினார்கள்.

## பருவப் பெண்கள் ஒப்பனைச் செய்தல்

கடவுள்மேல் கொண்ட காதலால் பருவப்பெண்கள் தாங்கள் வெற்றிபெறக் கருதி மாட மாளிகையையே போர்க்களமாகக் கொண்டு மலர் நிறைந்த படுக்கையால் அமர்ந்தனர். கால்சிலம்பை பறையாக முழக்கினர். வளைந்த புருவத்தை வில்லாக்கி, கண்ணை அம்பாகத் தொடுத்தனர். கருங்கூந்தலை கொடிப் படையாகக் கருதி, கைவளையல் ஒலியையே ஒலித்து

அங்காக ஊதிக் கொண்டனர். அணிகள் ஒன்றோடு ஒன்று இடித்து உரசும்படித் திகைத்தனர்.

மணப்பொடிகளைப் பூசி தங்களை ஒப்பனைச் செய்து கொண்டனர். ஏழு பருவப்பெண்களும் இவர் மேல் இவர் காதல் கொண்டனர். ஒவ்வொருவரும் தலையணிகளையும் காதணிகளையும் அணிந்திருந்தனர்.

ஏழுவகையான பருவப் பெண்களும், மாளிகையின் மேல் ஏறிநின்று, கடவுளைக் கண்டு, தெய்வக்காதல் கொண்டு கைகளைத் தலைமேல் கூப்பித் தொழுதனர். காதல் மயக்கத்தில் அறிவு கலங்கினர்.

"நாவின் அமைந்த குத்துமாலையான மங்கல நாணை அடையாளமாகச் சிவக்கடவுள் எமக்குத் தந்திடவில்லை யானால் இந்த நள்ளிரவு எம்மை அழித்துவிடும்" என வருந்தினும் உரைத்தனர்.

காதல் ஏக்கத்தால் கைவளையல்களைத் தாமே சோர்ந்து அழக் கண்டு ஏங்குவர். மணக்கோலத்தில் இருப்பதுபோல எண்ணி, பொன்னரி மாலையைக் கழுத்தில் அணிவார்கள். பிறகு வருத்தமுற்று கழற்றிவிட்டு, துன்னரி மாலையைச் சூடிக் கொள்வர்.

காதல் மயக்கத்தில் அறிவு கலங்கிய நிலையில் கண்ணுக்கு மை தீட்டும் போது, ஒரு கண்ணிற்கு மட்டும் மைதீட்டி விட்டு, மற்றொரு கண்ணை மறந்துவிடுவர். செம்பஞ்சுக் குழம்பை எடுத்துக் கண்ணாடிமேல் தடவுவர். பந்தை கிளியென எண்ணி அதனோடு பேசுவர்.

## 1. பேதைப் பருவம்

தலைவனாகிய சிவன் வீதிஉலா வருவதை ஏழு வயதுடைய பேதைச் சிறுமியும் கண்டாள். பேதைப் பருவமுடையவள், குற்றமில்லாத நல்லவள். மணல் சோறாக்கி

சிறுமிகளோடு விளையாடுவாள். சிறிய இடையையும், நெஞ்சுருத்தமான செருக்கு இல்லாதவள். மனத்தில் கபடமை இல்லாதவள். காளை போன்ற ஆண்களைப் பழித்துப் பேசாதவள்.

கடினமான வேலைகளைச் செய்யாதவள். பார்க்கின்ற பார்வையில் நேர்மையிருக்கும் கள்ளம் இருக்காது. பூச்சூடிய கூந்தலை நன்கு இறுக்கமாய்ப் பின்னித் தொங்கவிட்டிருக்க மாட்டாள்.

ஆண்களைக் கண்டால் அவர்களோடு அளவு கொள்ளும்படி விளையாட மாட்டாள். அடக்கமானவள். ஒன்றையே நினைத்து, ஒன்றையே பேசி, ஒன்றையே தவறாமல் செய்வாள். சிறுமியரோடு விளையாடுவாள்.

ஒருத்தி பாவையைச் சுட்டிக்காட்டி, 'இப்பாவைச் சிலைக்குத் தந்தை யார்?" என வினவிய போது, அதற்கு விடையாக இவள், 'முடிவில்லாத ஆற்றலும் புகழுமுடைய இறைவனே, அவன் கையிலே தீச்சட்டியை வைத்துக் கொண்டு ஐந்தொழில்களை உணர்த்துகின்ற கூத்தை நிகழ்த்துபவன். அவனே ஆடும் அம்பலவாணன்" என்றாள்.

பேதைப் பருவமுடையவள் இனிமேல்தான் காமன் நூலான காதலைப்பற்றி அறியப் போகிறாள்.

## 2. பெதும்பை

இது பதினொன்றாம் அகவை உடையது. உலகை அறிந்தும் அறியாத அறிவுடைய நிலையாகும். இந்த நேரத்தில் தலைவனான சிவக்கடவுள் காளையில் வருகிறார். இவரைக் கண்ட பெதும்பைப் பெண் நாணம் அடைகின்றாள். பெதும்பைப் பருவமென்பது எழில்மிக்க பேரொளிக் காட்டித் திகழ்வதாகும்.

காதணியான குழைகள் தொங்கவும், வெண்மையான பற்கள் ஒளி முத்துக்களாகப் பளிச்சிடவும், நெற்றியின் நடுவே தலை நடுவிலிருந்து சுட்டி அணி தொங்கி ஒளிமிளிர திங்கள் வட்டத்தைப் போன்ற திருமுகம் உடையவளாய்த் திகழ்கின்றாள்.

கங்கணமென்னும் பொன் கயிற்றைக் கட்டிய வானங்கும் கைகளையுடையவள். கிங்கிணி என்னும் ஒலிக்கும் அணியைக் காலிலே அணிந்தவள். மெல்லிய ஆடையை இடையால் உடுத்தியவள். மார்பிலும், தோளிலும் சந்தனக் குழம்பு தோய்க்கப்பட்டவள். கடலில் கடைந்த காலத்தில் கிடைத்த அமுதம் போன்ற இனியவள்.

நறுமணங் கமழும் இதழ் மலர்களைச் சூடிய கூந்தலைப் பெற்றவள். கிளியின் இன்பச் சொற்களைப் போல மொழிகளைப் பேசுபவள். கண்களுக்கு மையெழுதிக் கொண்டு அழகாயிருப்பவள்.

இத்தகைய அழகுடைய பெதும்பைக்குக் காதல் எண்ணம் வந்ததால் காமனின் படம் வரைய முற்பட்டாள். இவ்வாறு காமனின் உருவத்தைக் காதல் உணர்ச்சி ததும்ப வரைந்த பொழுது, கொன்றை மலர் மாலையை அணிந்த, எல்லோருடைய தீமைகளையெல்லாம் தீர்க்கும் சிவலோகன் ஆனேற்றின் மேல் ஏறிவந்தான்.

அவனைக் கண்டு காதல் மயக்கமுற்ற பெதும்பையின் கற்ற கல்வியும், கேட்ட கேள்வியின் அறிவு நலமும் தோற்றுப் போயின. நாணமும் தோற்றது; அறிவும் தோற்றது. இதனால் இவள் அணிந்திருந்த கை வளையல்கள் கழன்று வீழ்ந்தன. இடையால் அணிந்திருந்த மணிமேகலையும் பிடிப்பிலிருந்து நழுவ வீழ்ந்தது.

இதனால் பெதும்பைப் பருவமுடைய பெண் தன்னையே மறந்து செயலற்று ஒருஅவர் போல நின்றாள்.

## 3. மங்கைப் பருவம்

பதின்மூன்று வயதுடைய பருவம். இவளுக்குக் காதல் பற்றி தெரியும். இவள் கிளியோடு கொஞ்சி உரையாடிக் கொண்டிருக்கும் நேரத்தில் தலைவனான சிவன் வீதி உலா வருகின்றான். வருகையைக் கண்ட அவள் அவன் மேல் வைத்த கண் வாங்காமல் காதல் மயக்கத்தில் ஆழ்கின்றாள்.

இப்பேழ்மையுடைய பெண் தனது வீட்டை வாட்டுக் கடந்து வெளியே செல்லாத அடக்கமுடைய பண்பினள். வானில் வந்த கார்த்திகை நீர் சுடரும் அழகு போன்ற உருத்தியுடையவள். செந்தாமரை மலர் போன்ற உள்ளங்கையை யுடையவள்.

மான் விழி போன்ற பார்வை. செந்தாமரைப் பூத்த மலர் போன்ற முகம். இடையோ வஞ்சிக் கொடி போல் துவளும் மென்மையுடையது. நீண்டு பருத்த தோள்களோ மூங்கில் கணுவின் வடிவமாகும். இடையின் கீழ்ப்பகுதி தேரின் தட்டு போல் அமைந்திருக்கும்.

தேன் சொட்டும் மலர் சூடிய கூந்தலோ சுற்றில் நீரோடிய திடமான கருமணல் போலிருக்கும். வாயிதழ் சிவந்த பவள நிறம் போலிருக்கும். பற்கள் முத்துக்கள் போல ஒளிவீசும். கண்டி என்னும் பொன்மாலையை அணிந்திருப்பாள். காதுகளில் குண்டலம் தொங்கும். கனத்த மணிமேகலையை அணிந்திருப்பாள்.

இம்மங்கை பொன்னால் செய்த கூண்டிலுள்ள நாகணவாய்ப் பறவையைக் கையாலெடுத்து அதனோடு இனிய சொற்களால் பேசிக்கொண்டிருந்தாள்.

Scanned with CamScanner

இவள் பறவையோடு பேசிக் கொண்டிருக்கும் பொழுது தான், ஒளி வீசும் பெரிய யானையின் மேல் ஏறிக் கொண்டு தலைவனான இவன் வீதி உலா வந்தான்.

உலா வந்த கடவுளைக் கண்ட இயல்பாகவே அறியாமையாகின் கொண்ட மனத்தையுடைய மங்கை தலைவனின் மாலையை மாறிமாறிப் பார்த்தாள். திருமேனி அழகினையும் கண்டாள் கடவுளின் மார்பக ஒளியைத் தன் காதல் தினையில் வைத்து வாயந்து பெருமூச்சு விட்டாள்.

## 4. மடந்தைப் பருவம்

பத்தொன்பது அகவையுடைய மடந்தைப் பருவம் அறிவு பெற்ற பருவமாகும். இப்பருவத்தை சேரமான் பெருமான் நாயனார், 'திருத்தமிழின் தெய்வ வடிவாள்' என்கின்றார்.

சிவபெருமான் திருக்கையிலே வேடனாக வந்த போது வில்லை போன்ற வளைந்த நெற்றியும், பவளம் போன்ற வாய்தனும் வெற்றிவேல் போன்ற விழிப்பார்வையும், திரண்ட முத்துக்கள் போன்ற பற்களும், வஞ்சிக் கொடி போன்ற இடையும், மூங்கில் கணுப் போன்ற தோளும், மதிபோலும் முகமும், செந்தாமரை மலர் போலும் சிவந்த கால்களும், வாழைத்தண்டு போன்ற தொடையும், கொண்டு திகழ்பவள் மடந்தையாவாள்.

* அணிகலன்கள்

இவளின் மதிபோன்ற முகத்திற்கு, கழுத்தில் அணிந்த முத்து மாலையின் முத்துக்கள் எல்லாம் நான் மீனைப்போல ஒளி மின்னின. பலவகையான அணிகலன்களை மாலையாக அணிந்திருந்தாள். நெற்றிமேல் நெற்றிச்சுட்டியும், அணிந்து உடல் முழுதும் நால்வகையான வண்ணக் கலவையான சாந்தையும் மேனியெல்லாம் பூசி எழிலுடையவளாகக் காணப்பட்டாள்

இவள் தோழியருடன் யாழினை மீட்டி மகிழ்ச்சியாக இருந்த நேரத்தில் சிவபெருமான் காளை ஊர்தியில் உலா வருகின்றார் என்பதை ஊர்தியின் மணியோசை உணர்த்தியது. அப்பொழுது அவனின் திருமேனியினைக் கண்டவள் அவன்மீது காதல்கொண்டு, அவனின் கொன்றை மாலையை கழுத்தில் அணியும் வேட்கையில், ஏங்கி அழுது புலம்பினாள்.

## 5. அரிவைப் பருவம்

இருபத்தைந்து வயதுடையவள். காதல் கொள்ளும் தகுதியுடையவள். அழகே வடிவானவள். அரிவை என அழைக்கப்பட்டவள்.

மாசற்ற அழகுடைய அரிவைப் பருவத்துள்ள பெண், தலைவனின் அறிவு உலாவைக் கண்டவள். செந்தாமரை மலரிதழ் போன்ற சிறிய காலடியுடையவள். முழுநிலவு போன்ற முகமும், வில் போன்ற நெற்றிப் புருவமும், கார்முகில் போன்ற அடர்ந்த கரிய கூந்தலும், பளபளக்கும் சிவந்த வாயிதழும் உடையவள்.

அன்னப்பறவையின் நடைபோன்ற தன் காலடியின் மேலே பாடகம் என்னும் பாதசரம் அணிந்தாள். பலவண்ண மணிகளை வளையல்களாக முன்கைகளில் அணிந்தாள். பொன்னரிமாலையைத் தன் தலைக்குச் சூட்டினாள்.

இத்தகைய எழிலுடைய அரிவை வீணையை எடுத்து தேவர்களின் இறைவனான, சிவக்-கடவுளின் மேல் காதல் இசையை மீட்டினாள். அப்பொழுது இறைவன் காளை ஊர்திமேல் வீதி உலா வந்தார். அப்பொழுது அரிவை இசையை நிறுத்திவிட்டுத் தன் தோழியரோடு பேசுகின்றாள்.

" என் தங்கமான தோழியரே! இன்றன்றோ நாம் நம் கடவுளின் மேனியை அழகு செய்து காண வேண்டும் என்றாள்.

## காதல் ஏக்கம்

அரிவை தன் ஆடையணிகளைத் திருத்திக் கொள்கின்றாள். அவிழ்ந்த முடியைத் திருத்துகின்றாள். இடையிலுள்ள மேகலையை நேராக்கி அணிகிறாள். பின்னர் தலைவர் மேல் கொண்ட காதலால் தன் பூந்துகிலாடையை அவிழ்ப்பதும், சூழ்ந்து கட்டுவதாகவுமாய் இருந்தாள்.

சோர்வுற்று அழுவதும் கை கூப்பித் தொழுவதுமாய் நிலை குலைந்தாள். துன்பத்தில் ஆழ்ந்து அழுந்தினாள். மூச்சு உயிர்த்தாள். ஆடை நெகிழ்ந்தது.

## 6. தெரிவைப் பருவம்

அறிவும், அழகும், ஆளுமையும் தெரியக்காட்டும் பேரழகியே தெரிவை ஆவாள். இவள் இருபத்தாறு முதல் முப்பத்தொரு அகவையுடையவள். அழகான தோற்றம் உடையவள். மயக்கம் தரும் மழலைச் சொற்போல பேசும் மொழியுடையவள்.

தளிர் போன்ற சிவந்த காலடிகளும், அழகிய கைகளும் உடையவள். முழுமதி போன்ற அழகுடைய முகம் திண்ணிய தனையும் உடையவள். வண்ணக் கலவையான மாந்தளிர் மேனியும், சிவந்த வாய் இதழும் கொண்டு விளங்குவதால் இவள் இளவேனிற்காலத்திற்குரிய காதல் வளம் உடையவள்.

பறை முழங்குவது போன்ற ஓசையையுடைய சிலம்பை அழகு மிகுந்த தன் காலின் மேல் அணிந்தாள். இடுப்பில் அழகான துகிலாடையையும், மேகலையணியையும் கட்டினாள். பொன் காப்பால் பச்சை மூங்கில் தண்டு போன்ற தோள்களை அணிசெய்தாள். கழுத்தைப் பொற்சங்கிலி மாலைகளால் நிறைத்தாள். காதுக்கு வில் போல் வளைந்த குண்டலங்களைத் தொங்கவிட்டாள்.

Scanned with CamScanner

கண்களுக்கு மை தீட்டினாள்.

* பண்பு நலன்கள்

அழகிடைய இவள் அன்னப்பறவைப் போல் நல்ல பண்பையும், ஒழுக்கத்தையும் மட்டுமே தேர்ந்து கொள்வாள். குயில் போன்றே இனிமை தரும் குரலில் பேசுவாள், பாடுவாள். கூந்தலில் கலையழகு தோன்ற பூக்களைச் சூடியிருப்பாள், தெளிவான செங்கழுநீர்ப் பூவின் வண்ணமுடைய பட்டுப்புடவை உடுத்துவாள். நெற்றியில் செந்தூரக் குங்குமப் பொட்டு இட்டுக் கொள்வாள்.

இத்தகைய பண்பு நலன்களையுடைய தெரிவையானவள் தோழியுடன் சொக்கட்டான் விளையாடினாள். அப்பொழுது செஞ்சடையுடைய சிவபெருமான் வீதி உலா வந்தார். அவரைக் கண்ட தெரிவை,

"நாணமில்லாதவர் நடந்து செல்லட்டும். நாணம் உடையவருக்கோ நடக்க இடையில்லை. வலிமையுள்ளவர்கள் ஓடியட்டும். என் அழகும் ஓடியட்டும். பணிக்குவந்தவர்கள் இங்கிருந்து நீங்கட்டும். ஏற்றுள்ளவர்கள் வாருங்கள். நல்ல எண்ணமுடையவர்களே என் நிலையை நினைத்துப் பாருங்கள்" என்றாள்.

இவ்வாறு வருந்திக் கூறிய தெரிவை வாழ மெலிந்து வளமற்றவள் போல் காணப்பட்டாள்.

## 7. பேரிளம் பெண்

பேரழகும் பேரின்பமும் வாய்ந்த பேரிளம் பெண் நாற்பது வயதுடையவள். அழகான தோற்றமுடைய பெண்ணரசியாவாள். அறிவுடையவருக்கு ஐம்புலன்களால் அழகு விருந்தாவாள். இவள் பேசும் சொற்களில் பணிவும் பண் போன்ற இனிமையும் கலந்திருக்கும்.

Scanned with CamScanner

இவளுடைய உறுப்பழகு ஒவ்வொன்றும் வியந்து புகழத் தக்கவையே. மென்விரல் நகங்களில் செங்குருதி நிறம் தெரியும். அழகு நலமுடைய வஞ்சிக்கொடி போன்று இவளது துவளும் நுண் இடையிருக்கும். தேமலும் பொன் நிறப் பசலையும் படர்ந்திருந்தது.

நங்கை நல்லாளின் தோள்கள் காம்பு மூங்கில் தண்டு போலிருக்கும். காந்தள் மலர்போன்ற கைவிரல்கள். பவளம் போன்ற சிவந்த இதழ்கள். பற்கள் முத்தொளியைப் போல ஒளி வீசும்.

மைதீட்டிய கண்கள். காதுகளில் பளிச்சிடும் நன்னிறமுடைய குண்டலங்களை அணிந்தவள். அழகுமிக்க குளிர்ந்த முழுமதி போன்ற முகத்தையுடையவள். பூக்களைச் சூடிய கருங்கூந்தலைக் கொண்டவள். நெற்றிமேலே கண்ணி மாலையை வடிவமாக அணிந்தவள். உடம்பு முழுதும் நறுமணப் புகையால் மணக்கச் செய்பவள்.

## காதலியின் கடவுட் கொள்கை:

பண்போல் இனிக்கும் சொற்களைப் பேசுகின்ற தோழியர்கள் இப்பேரிளம் பெண்ணிற்கு வெண்ணிறக் கவரி வீசிக்கொண்டிருந்தனர். எல்லோரும் இவளுக்குப் "பல்லாண்டு வாழ்க" என்று வாழ்த்திக் கூறினர்.

இப்பேரிளம், "எனது கண் செக்கச் சிவந்த செம்பொனான சிவத்தையன்றி வேறு எதையும் காணாது. அவரின் புகழான இசைப் பாட்டையன்றி என் செவி வேறு எதனையும் கேளாது. அவனது திருவடிகளையன்றி வேறு தெய்வத்தைகைகள் தொழாது.

தீயை கையில் வைத்துக் கொண்டு கூத்தாடும் அம்பலவாணரிடத்திலேதான் எனக்கு அன்புண்டு" என்று தன் தோழியர்களிடம் கூறினாள்.

## இறைவன் வீதிஉலா

தலைவி இவ்வாறு பாடிக்கொண்டிருக்கும் பொழுது தலைவனான கயிலைநாதர் வீதி உலா வந்தார்.

சுடுகாட்டில் கூத்தாடுகின்ற தொன்மையான கடவுளாகிய சிவபெருமான் தேவர்கள் புடைசூழ அழகிய மாடங்கள் நிறைந்த தெருவில் உலா வருகின்றார். அவர் வருகையை மாசில்லாத சிறப்பு வண்ணமுடைய சிலம்பணிந்த தோழியர்கள் கண்டு மகிழ்ந்து கூறினார்கள்.

## இறைவனிடம் தலைவி வேண்டல்

தோழியர் கூறுவதைக் கேட்ட தலைவி கயிலை நாதரிடம் தன் காதல் வேட்கையை வெளியிட்டாள்.

"அண்ணலே! ஆண்டவனே! நீயே எனக்கு அருள்புரிய வந்தாய். என் மேல் காதல் கொண்டு, ஏங்கவைத்து, மையல் வைத்து, கைவளையல்களைக் கவர்ந்து கொண்டாய். எனக்கு நீ காதல் மயக்கத்தையும், அறிவு மயக்கத்தையும், துயரினையும் தந்தாய். இதுவோ உனது தகைமை, இன்னருள்" என்றாள். பிறகு தேன் சிந்தும் பூவான மாலைபோல் வாடி மயங்கினாள்.

கயிலைமலையில் இறைவன் வீதி உலா வருவதைக் கண்ட, இனியசொற்களைப் பேசுகின்ற, பருத்த தோள்களையுடைய, சிவந்த பவளம் போன்ற வாயிதழுடையவர்களுமான இளம் பெண்களின் பேச்சு ஆரவாரம் பெரிதாய்க் கொண்டிருந்தது.

# அலகு - 2. பரணி

## கலிங்கத்துப்பரணி -

தமிழில் உள்ள தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்களுள் பரணி என்பதும் ஒன்றாகும். போர்க்களத்தில் ஆயிரம் யானைகளைக் கொன்று, வெற்றிபெற்ற வீரனைப் புகழ்ந்து பாடுவதைப் 'பரணி' என்பர்.

பெரும் போர் புரிந்து வெற்றியுற்ற வீரனைச் சிறப்பித்துப் பாடுவதையும் பரணி என வழங்குவதும் உண்டு. தமிழில் தோன்றிய முதல் பரணிநூல், கலிங்கத்துப் பரணி ஆகும். இது தாழிசையால் பாடப்பெற்றது. செயங்கொண்டார் பாடிய இந்நூலை ஒட்டக்கூத்தர், 'தென்தமிழ்த் தெய்வப் பரணி' எனச் சிறப்பித்துக் கூறியுள்ளார்.

### 1. காடு பாடியது

பாலை நிலத்தையும், அது வெம்மை மிகுதியால் விளங்கும் இயல்பையும் பற்றி கூறுவது.

பேய்களுடைய தெய்வமாகிய காளி தேவி வாழும் பாலை நிலத்தைச் சார்ந்த காடு.

பொரி பொரியாய்ப் போன காரைச் செடிகள். கருகிப்போன ஈறை மரங்கள். எரிந்து போன விறை மரங்கள் தீப்பற்றி எரிந்த மூங்கில் மரங்கள். காய்ந்த ஓமை, பாலை மரங்கள் அப்பாலை நிலத்தில் எங்கும் விரவி காணப்பட்டது.

இலை, பழம் உதிர்ந்த விளாமரங்கள், நெல்லி மரங்கள், காய்ந்து போன தும்பைச் செடிகள், உலர்ந்த வேலமரங்கள், மாய்ந்த முள்ளிச் செடிகள், வள்ளிக்கொடிகள்

விளைவுபட்ட கள்ளி மரங்கள் ஆகியவை அப்பாலை நிலமெங்கும் பரவியிருந்தன.

## பரிதியின் செயல்,

பாலை நிலம் கொடியது. அதன் தரை முழுவதும் வெயிலின் வெப்பத்தால் நில வெடிப்புகள் காணப்படுகின்றன. அவற்றில் சூரியனின் ஒளிக்கதிர்கள் இயற்கையாகப் படுகின்றன. இது சூரியனானவன், 'தனது மனைவியாகிய சாயை என்பவள் புகுந்து ஒளிந்து கொண்ட இடம் யாது' எனத் தேடுவது போலிருந்தது.

## நிழல் இல்லாமை

இரை தேடுவதன் பொருட்டு வானத்தில் வட்டமிட்டு அசைந்து செல்கின்றன கொடிய பருந்துகளின் நிழலானது, பாலை நிலத்தின் வெப்பத்துக்குப் பயந்து, அதனைத் தாங்கமாட்டாமல், அக்கொடிய பாலைக் காட்டை விட்டு ஓடிப் போகின்றது. அவ்வாறு ஓடுகின்ற நிழலே அல்லாமல் நிலைபெற்றிருக்கும் நிழல் என்பது அப்பாலைவனத்தில் ஓரிடத்திலேனும் இல்லை.

## நிழலின் செயல்

மரத்தின் அடியிலே நின்ற நிழலானது, வெளியே தலைகாட்டினால் வெயில் உட்கொண்டு விடுமோ? என்று கருதியும், நீரின்றி வாடும் மரங்கள் தங்கள் நிழலைத் தாமே உட்கொள்ளக் கூடும்' என்று கருதியும் பயந்து, அம் மரங்களின் கீழிருந்து யாரும் அறியாதே விலகிப் போயிற்று.

## நெருப்பும் புகையும்

செக்கச்சிவந்த பாலை நிலப் பரப்பானது செந்நெருப்பைக் கொட்டித் தகட்டைப் பழுக்கச் செய்து நிலத்தை அமைத்ததை ஒத்திருக்கின்றது. அப்பாலை

நிலத்தின் மேலே பறக்கும் புறாக்கள். அந்நெருப்பிலிருந்து திரண்டெழுந்த புகைக் கூட்டத்தை ஒத்திருக்குமே அல்லாமல், வேறு எவற்றிற்கும் ஒப்பாகமாட்டா.

## நிலத்தில் நீரின்மை

பாலை நிலத்தில் ஒரே கொடிய வெப்பம். அதனால் மானின் வாய் வெந்து போய் உள்ளது. மானுக்குத் தாகம் அதிகம் ஏற்பட்டது. நெருப்பிலிருந்து நீர் கிடைத்தாலும் இருந்து விடும். அப்படி ஒரு பேரெண்ணம் மானுக்கு. செந்நாயின் வாயிலிருந்து வடியும் அருந்தத்தகாத எச்சில் நீரைக்கூட அருந்த் தம் நீரென கருதி மகிழ்ந்தது.

## நிலத்தின் வெம்மை

வானிலுள்ள தேவர்கள், நிலத்தில் தங்கள் திருவடிகளை வைக்காமல் இருப்பதற்க்குக்காரணம் அப்பாலை நிலத்தில் காணப்படும் வெப்பத்தின் கொடுமையே. மனிதர்களால் எவ்வாறு தாங்க முடியும்.

சூரியனுடைய பச்சைக்குதிரைகள் வானத்தில் பகல்வேளையில் இயங்கிச் செல்கின்றன. இரவில் செல்வதில்லை. ஏனெனில் ஞாயிறு பகலில் காள்வாளும் பாலை நிலத்தைக் கடந்து சென்றது. அப்பொழுது அந்நிலத்தின் கொடிய தன்மையால் அதற்குக் களைப்பு ஏற்பட்டது. அந்த களைப்பினை தணித்துக் கொள்ளும் நேரம் இரவு வேளை. அதனால்தான் ஞாயிறு இரவு வேளையில் அங்கே இயங்குவதில்லை.

## பனிநீரும் மழைநீரும் வியர்வை நீரே

கார்மேகமும் வெண்ணிலவும் பாலை நிலத்தைக் கடந்து செல்வோம் என்று எண்ணி மெல்ல மெல்லச் சென்றன. ஆனால் அந்நிலமெங்கும் ஒரே கொடிய வெப்பமாக இருந்தது. அவற்றால் அதனைப் பொறுக்க முடியவில்லை அதனால் விரைந்து ஓடலாயின. அப்படி ஓடும் போது அவற்றின் உடல் இளைத்து வேர்வையாகக் கொட்டிற்று. ஐயோ! அவ்வாறு கொட்டிய

வியர்வை நீரையே கார்மேகம் மழைநீராகவும், வெண்ணிலவு பனிநீராகவும் பெய்தன.

## தேவர்களின் வாழ்க்கை

தேவர்கள் வானத்தின் உச்சியிலே குளிர்ந்த கார்மேகத்தைத் திரைச்சீலையாக அமைத்துக் கொண்டு, சந்திரனை விசிறியாகப் பிடித்து விசிறிக் கொண்டும் இருக்கிறார்களே அதற்குக் காரணம், கொடிய வேகம் மிகுந்த பாலைநிலத்தின் பொறுக்க முடியாத வெப்பக் கொடுமையைச் சிறிதேனும் தணித்துக் கொள்ளும் பொருட்டே ஆகும்.

## பேயின் மூச்சு

இவ்வுலகம் இடம்விட்டுப் பெயர்ந்து அழிந்து போகாமல் காத்துக்கொள்ளும் பொருட்டு, இப்பாலை நிலத்தில் காளி தேவியால் நிறுத்தி வைக்கப்பட்ட பேய்கள் தனித்தனியாக நின்று பெருமூச்சுவிட்டால் எப்படியிருக்குமோ, அதுபோல இப்பாலை நிலத்திலுள்ள மரங்கள் எல்லாம் எரிந்து கரிந்து புகைந்து கிடந்தன.

நன்றாய் முற்றிய நீண்ட மரங்களின் பொந்துகளிலிருந்து பெரிய பாம்புகள் வெளிப்படுதல், பசியால் உடல்மெலிந்த பேய்கள் தாகத்தைப் பொறுக்க மாட்டாது வாயிலுள்ள ஈரம் புலர்ந்து, வறண்ட நாக்குகளை வெளியே நீட்டிக்கொண்டிருப்பது போலத் தோன்றும்.

## சூறாவளியின் இயல்பு

பார்ப்பவர்களின் கண்கள் சுழலும்படியாகப் பாலை நிலத்தில் தோன்றி வருகின்ற கானல்நீரானது, தண்ணீர் அலையாக மிதந்து வருவதுபோலத் தோன்றும். அந்தத் தண்ணீரில் சுழிகள் சுழன்று வருவன போல, சுழல் காற்றும் சுழன்று சுழன்று அடிக்கும்.

அழன்று வீசிய சூறைக்காற்று, உயிர் போய் அழிந்த உடலைச் சுட்டெரித்த சுடலைச் சாம்பலைக் கிளறி அடித்தது. அப்படிக் கிளறி அடித்த சாம்பல் அங்கே கிடந்த மாணிக்கங்களின் செந்நிறத்தை மறைத்தது. அவ்வாறு செந்நிறம் மறைந்து கிடக்கும் மாணிக்கங்கள், புகையால் மூடப்பட்ட நெருப்பைப் போலவும், சாம்பலால் மூடப்பட்ட நெருப்பைப் போலவும் தோன்றும்.

முத்துக்கள் கொப்புளங்கள்

கணுக்கள் வைரத்த மூங்கில்களிலிருந்து முத்துக்கள் வேகமாகத் தெறித்துப் பாலைநிலத்தில் விழுந்து கிடக்கும். அவை, பாலை நிலம் வெதும்பியமையால், அதன் உடம்பில் தோன்றிய வியர்வைப் புள்ளிகளைப் போன்று இருக்கும். கொப்புளங்களை ஒத்திருக்கும்.

இவ்வாறு காட்டின் தன்மை காணப்பட்டது.

---

## 2. கோயில் பாடியது.

பாலைக்குரிய தெய்வமாகிய கொற்றவை எழுந்தருளியுள்ள கோயிலைப் பற்றி கூறும் பகுதி. வீரமறவர் வழிபாடியற்றும் காளிகோவிலின் அமைப்பும், பிறவும் கூறப்பட்டுள்ளது.

கொடிய பாலைவனத்திலே கோயில் கொண்டிருப்பவள் காளிதேவி. அவளுக்குப் பிரமனால் படைக்கப்பட்ட இந்த உலகமே பழைய கோவிலாகும். இருந்தாலும் புதிய கோவிலும் அவளுக்கு இங்கே உள்ளது.

புதிய கோயிலுக்குக் கடைகால்

போர்க்களத்தில் முதலாம் குலோத்துங்கச் சோழனின் வாளின் வாய்ப்பட்டு இறந்த மன்னர்களின் பட்டதரசிகள் அணிந்திருந்த நகைகளிலுள்ள பெரியஇரத்தினக் கற்களே புதிய கோவிலுக்குக் கடைக்கால் இடும் கற்களாக அமைந்தன.

போர்க்களத்திற்கு வந்து தன்னை எதிர்த்த சேர வீரர்களை முதற் குலோத்துங்கன் கொன்று குவித்தான். அவ் வீரர்களின் கொழுப்பாகிய சேற்றை, இரத்தமாகிய நீரில் குழைத்து, பெரிய தலைகளாகிய கற்களால் கோயிலுக்குச் சுவர் எழுப்பினான்.

அவனுடைய யானைகள் பகையரசர்களின் காவற்காடுகளை தம் கொம்புகளால் பிடுங்கி எறிந்தன. அவ்வாறு எறிந்த கணைய மரங்களே, புதிய கோவிலுக்குத் தூண்களும் உத்திரங்களும் ஆயின.

மிதிலையில் குலோத்துங்கச் சோழனால் கொன்று குவிக்கப்பட்ட யானைகளின் கொம்புகளைக் கோயிலுக்கு கைமரமாக இட்டனர். அவற்றின் வலத எலும்புகளைப் பரப்பு மரங்களாக அடுக்கினர்.

## மேல் முகடு

முன்னொருநாள் முதற் குலோத்துங்கச் சோழன் பகையரசர்களோடு போர் புரிந்து, அவர்களிடமிருந்து பெற்ற யாழி, யானை, பன்றி, சிங்கம் ஆகிய உருவங்கள் வரையப்பட்ட தனித்தனிக் கொடிகளை வரிசையாக வைத்து மேல் முகடு அமைத்தான்.

காளி கோயிலின் கோபுரங்களும் பெரிய மதில்களும், வெள்ளியால் கட்டி முடித்ததைப் போலப், போரில் இறந்தவர்களுடைய வெள்ளிய எலும்புகளால் கட்டி முடிக்கப்பெற்றன. அக்கோபுரங்களையும் மதில்களையும் கொள்ளிவாய் பேய்கள் காவல் புரிந்தன.

## மகர தோரணம்

சூரும் பேய்கள், கரிய இரும்பினால் ஒப்பற்ற இரண்டு தூண்களை நட்டன. ஓர் இரும்பைச் சுறாமீன்போல வளைத்து மகர தோரணமாகவும் கட்டின.

மதிலின் மேல் வீரர்களின் தலைகளும், கொழுப்பாலாகிய கொடிச் சீலைகளும், பசிளம் தெந்தை -களின்

இராந்தலைகளும், அக் கோவிலின் எல்லா இடங்களிலும் தொங்க விடப்பட்டன.

முதற்குலோத்துங்கச் சோழன், பாண்டியனுடைய யானைகளின் முறம் போன்ற காதுகளை அறுத்துக் காளி-கோயிலில் மாலையாகத் தொங்க விட்டான். மதுரையில் அரமீன் வடிவத்தில் ஒரு மகரதோரணம் இருந்தது. அதனைப் பறித்து வந்து, காளி கோவிலின் முன்னே இரத்தினங்களைப் பதித்த தூண்போல் நட்டு வைத்தான்.

ஈ. மணிவிளக்கு

காளியை வழிபடுவோர் கோவிலைச் சுற்றியும் பெருக்கிப் பசுமை இரத்தமாகிய தண்ணீரைத் தெளித்தனர். கொழுப்பாகிய மலர்களைத் தூவினர். பிணங்களைச் சுடும் விளக்கை எல்லாப் பக்கங்களிலும் ஏற்றி வைத்தனர்.

காளி தேவியை வழிபடும் வீரர்கள், தாங்கள் விரும்பும் வரத்தைத் தருமாறு தேவியிடம் வேண்டினர். அவ்-வரத்திற்கு ஈடாக, எங்கள் தலைமுதலிய உறுப்புகளை அரிந்து கொடுக்கிறோம் என்று ஆரவாரத்தோடு கூவி வழிபட்டனர்.

காளிதேவியை வழிபடுவோர் அக்கினிப் பூசைக்குத் தகுதியான நெருப்பை மூட்டினர். தங்கள் விலா எலும்பைப் பிடுங்கி நெருப்பில் தொடர்ந்து எரியும்படி விறகாக வைத்தனர். உடம்பிலிருந்து பெருகி வழியும் இரத்தத்தை நெய்யாக ஊற்றினர்.

பலிகடன் செலுத்தும் பலிபீடத்தில் வீரர்கள் நீண்ட குடுமியோடு கூடிய தங்கள் தலைகளை அறுத்து வைத்தனர். ஆண்டலைப் பறவைகள் அத்தலைகளைத் தம் இனத்துப் பறவைகள் என்று எண்ணிப் பக்கத்தில் வந்து பார்க்கும். அந்தப் பறவைகளை, அறுபட்ட தலைகள் பயமுறுத்தும்.

Scanned with CamScanner

வீரர்கள் காளி தேவிக்குத் தங்களின் தலைகளை அரிந்து வைத்தனர். 'கடமை நிறைவேறிவிட்டது. இனிச் செய்ய வேண்டியது ஒன்றுமில்லை' எனஎண்ணிய உடல்கள் கூத்தாடின. பெரும்பசியுடைய பேய்கள் அதனை உண்ண அவற்றின் பின்னாலேயே சென்றன.

## மெய் காப்பாளர்கள்

காளி தேவியின் மெய்க்காப்பாளரும், பேய்களில் ஒருவகையினரும், அவளால் விரும்பப்படுபவரும், பழங்காலந் தொட்டு வருபவரும், ஆன சாதகர்கள் பறை பம்பை, முழவு முதலிய தோற்கருவிகளிலிருந்து எழுகின்ற தாள ஒற்றோடு சேர்ந்த ஒலியைக் கேட்டுத் தேவியை வணங்க வருவார்கள்.

யோகினிப் பெண்கள், வாளை வலக்கையிலும், வீரர்களின் தலைகளை இடக்கையிலும் பிடித்துக் கொண்டு இடை அசைய நடந்து தேவியிடம் வந்து சேர்வர்.

பருத்து நீண்ட மூங்கில்களின் முனைகளில் எல்லாம் வீரர்களின் தலைகள் தொங்கின. அவை எல்லாத் திசைகளிலும் கண் இமைக்காமல் சிரித்தன. அச்சத்தை உண்டாக்கி அழுகின்ற கண்களையுடைய பேய்கள், அந்தத் தலைகளைப் பார்த்துப் பயந்து, நாள் முழுவதும் தூங்காமலே இருந்தன.

காளிதேவி வாழும் அடலையால் நரிகள் பறைபோல் ஓசையெழுப்பின. கொள்ளிவாய்ப் பேய்கள் தம் குட்டிகளுக்கு சிவந்த இறையைத் தேடித் திரிந்தன. நரிகளின் வாயில் நல்ல இறைச்சி இருப்பதைப் பார்த்து, அதைப் பிடுங்கிக் கொண்டு போய்விட்டன.

பருந்துகள் இறந்த பிணங்களின் கொழுப்பையும், இறைச்சியையும் பிடுங்கித் தின்னும். காளிதேவியின் கோயிலைச் சுற்றிலும் பிணங்களைச் சுடும் நெருப்பு, செம்பருத்திச் செடி, பேய்கள், சுடுகாடு, ஒன்றோடு ஒன்று சண்டையிடும் நரிகள் ஆகியவைகளாகவே இருந்தன.

# 3. களம் பாடியது

முதற் குலோத்துங்கச் சோழனுடைய படைத்தலைவனான கருணாகரத் தொண்டைமான் கலிங்க நாட்டவரோடு போர்க்களத்தில் புரிந்த வீரச்செயல்களை கூறும் பகுதி.

## * களச்சிறப்பு

பதினெட்டு ஆண்டுகள் நடைபெற்ற தேவர் - அசுரர் போர், பதினெட்டுத் திங்கள் நிகழ்ந்த இராமாயணப் போர், பதினெட்டு நாட்கள் நடைபெற்ற மகாபாரதப் போர் ஆகியவை இவ்வுலகில் சிறப்புப் பெற்ற போர்களாகும். அதைவிட சிறந்த போராக கருணாகரன் கலிங்கரோடு நடைபெற்ற போராகும்.

கலிங்கப் பேய்கள், காளி தேவியிடம் வேண்ட, காளி தேவி கலிங்கப் போர்க்களத்தைச் சென்று அடைந்தாள்.

## * யானையும் கப்பலும்

போர்க்களம் எங்கும் ஒரே இரத்த வெள்ளம். அவ்வெள்ளத்தில் யானைகள் ஒன்றன்பின் ஒன்றாக நீந்திச் சென்றன. இக்காட்சி கடலில் கப்பல்கள் ஒன்றன்பின் ஒன்றாக செல்வது போலிருந்தது.

பெரிய குதிரைகள் தம்மீது இட்ட சேணங்கள் சரியும் படியாகப் பாய்ந்து செல்கின்றன. அப்பொழுது அவற்றின் கால்கள் கொழுப்பாகிய சேற்றில் புதைந்து கால்களை எடுக்க முடியாதபடி வரிசையாக நின்றன. இக்காட்சி இரத்தவெள்ளத்தை அடைக்க வரிசையாக அமைந்த குதிரை மரங்களை ஒத்திருக்கின்றன.

பருந்துகளும் கழுகுகளும் தம் உடலையே உண்ணக் களத்தில் இறந்து கிடக்கும் வீரர்கள், தாமரை மலர் போன்ற தங்கள் முகம் மேலும் மலர்ந்து காணப்படுகிறார்கள். இறந்த உடல்களின் தசைகளைத் தின்பதற்காக நரிக்கூட்டங்கள் அங்கே உள்ளன.

Scanned with CamScanner

* தேவர்கள் போற்றுதல்

யானைகள் போர்க்களத்தில் பெருமழை பெய்வது போல மதநீரைச் சொரிந்து கொண்டிருந்தன. அந்த மதநீர் பொழியும் வரையிலும் வண்டுகள் யானைகளைப் பற்றியிருந்தன. யானைகள் இறந்து விட்டன. மதநீரும் ஒழிந்து விட்டது. அப்பொழுது கருணாகரனின் வெற்றிகண்டு தேவர்கள் பூமழை பொழிந்தனர். வண்டுகள் மேலே பறந்து சென்று விட்டன.

யானைகள் இறந்ததினால் அவற்றோடு அரசர்க்குரிய கொடிகளும் சாய்ந்து படிந்து கிடந்தன.

* மகளிர்நிலை

கற்புடைய மகளிர் தங்களின் கணவர்களின் முகங்களைத் தேடினர். காளியின் மெய்க்காப்பாளர்களாகிய சாதகரைக் கேட்டனர். காணவேயில்லை. அடவைக்கும் சென்று பார்த்தனர். அங்கும் காணாது போகவே, பிணங்களைத் தின்னும் இடாகினி' என்ற பேயிடம் வினவினர்.

போர்க்களத்தில் வெட்டுண்டு வீழும் தம் கணவனுடைய உடம்பை நிலமகளும் தாங்குதற்கு விடாமல், தன் மார்போடு அணைத்துக் கொண்டு, தேவலோகத் தெய்வப் பெண்கள் அவனுடைய உயிரைத் தழுவுவதற்கு முன்பே, தன் உயிரையும், தன் கணவனின் உயிரோடு ஒருசேர விடுகிறாள்

போர்க்களத்தில் வீரர்கள் குதிரைகளோடு குதிரைகளையும் வீரர்களோடு வீரர்களையும் பிடித்து மோதி அடித்தார்கள். அவ்வாறு அடிக்கும் பொழுது அவற்றினின்றும் பீறிட்டெழுந்த மிகுந்த இரத்தம் வானத்திலும் சிதறித் தெறித்தது. அதனால், வானத்திலிருந்த கரிய மேகங்கள் எல்லாம் சிவந்த மேகங்களாகத் திகழ்ந்தன.

Scanned with CamScanner

* கருங்காகம் வெண்காகத்தை ஒத்திருத்தல் :

பிணங்கள் அதிகமாக கிடக்கின்றன. இரத்தம் பரவி காணப்படுகின்றது. கொழுப்புக்களும் நிறையக் கிடக்கின்றன. பிணந் தின்ன வந்த காகங்கள் அந்த வெள்ளிய கொழுப்புக்களைப் போர்வையாக மூடிக் கொண்டு விட்டன. ஆதலால், கரிய காகங்கள் வெண்ணிறக் காகங்களாகத் தோற்றமளிக்கின்றன.

போர்க்களத்தில் உடல் முழுவதும் அம்புகள் தைக்கப் பெற்று நிலத்தில் விழாது நிற்கிறார்கள். அவர்களின் உடலிலுள்ள கொழுப்புகளைத் தின்ன வருகின்ற கழுகு, பருந்து போன்ற பறவைகளை வேல்கள் அழுத்திக் குத்துகின்றன.

வீரர் வியத்தல்

கருணாகரன் போர்க்களத்தில் விட்ட அம்புகள், கலிங்க வீரர்களுடைய கேடயத்தையும், கவசத்தையும் ஊடுருவிச் சென்று, அவர்களுடைய அகன்ற மார்பினையும் துளைத்துச் சென்றன. கலிங்க வீரர்கள் அவனைப் புகழ்ந்தனர்.

போர்க்களத்தில் தலையையும், உடலின் முன் பகுதியையும் வெட்டுண்ட யானையின் உடல்கள் ஆங்காங்கே சிதறிக் காணப்படுகின்றன.

இத்தகைய காட்சிகளைக் கண்டு காளிதேவி வியப்படைந்தாள்.

## மதுரை

## அலகு-3. மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ்

தமிழ் இலக்கிய வரலாற்றில் சிற்றிலக்கியக் காலத்தில் தோன்றிய இலக்கிய வகை பிள்ளைத்தமிழாகும். குழந்தை பிறந்த மூன்றாம் மாதம் தொடங்கி இருபத்தோராம் மாதம் வரை ஒற்றைப்படை மாதங்களைப் பருவங்களாகக் கொண்டு பாடப்படுவது பிள்ளைத் தமிழாகும். 96 வகையான சிற்றிலக்கியங்களில் ஒன்று.

பிள்ளைத்தமிழ் ஆண்பால் பிள்ளைத்தமிழ், பெண்பால் பிள்ளைத்தமிழ் என இரண்டு வகைப்படும். காப்பு, செங்கீரை, தாலாட்டு, சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, சிற்றில், சிறுபறை, சிறுதேர் என்பன ஆண்பால் பிள்ளைத் தமிழுக்குரியன.

ஆண்பாற் பிள்ளைத் தமிழில் கூறப்பட்ட முதல் ஏழு பருவங்களும், கழங்கு, அம்மானை, ஊசல் என்பவற்றையும் சேர்த்து பத்துப் பருவங்கள் பெண்பாற் தமிழுக்குரியவை.

சிதம்பர பாட்டியல், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம் போன்ற நூல்கள் பிள்ளைத் தமிழின் இலக்கணத்தினை விரிவாகக் கூறுகின்றன.

மதுரையில் கோயில் கொண்டிருக்கும் மீனாட்சியம்மையை பாட்டுடைத் தலைவியாகக் கொண்டு குமரகுருபரரால் இயற்றப்பட்ட நூல் மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழாகும். மொத்தம் 103 பாடல்கள் உள்ளன.

—

Scanned with CamScanner

# 1. காப்புப்பருவம்

சிவன், திருமால் உள்ளிட்ட பதினாறு தேவர்களை அழைத்து குழந்தையைக் காக்குமாறு பாடுவது காப்புப்பருவம் ஆகும். இது குழந்தையின் மூன்றாம் மாதத்தில் பாடப்படும்

## 1. திருமால்

மாலையாகக் கட்டப்பட்ட குளிர்ச்சி பொருந்திய துளசியிலிருந்து வழிந்தோடுகின்ற தேன் வெள்ளம் பரவிச் சேற்றை உருவாக்கவும், தாமரை மலரில் வீற்றிருக்கின்ற திருமகள் ஒரு அணையாகக் கொடுத்து, பாம்பணை மீதுயள் கொண்டுள்ளவனும், பழமையான வேதங்களின் பின்-சென்றவனும், கருமையான மேகநிறமுடையவனுமாகிய திருமால்,

இந்திர விமானத்தில், வெண்மையான பிடரிமயிரை உடைய சிங்கங்கள் தாங்கும் இருக்கையில் பொன்னால் செய்யப்பட்ட மணிமுடியை தலையில் அணிந்து, எம் இறைவனாகிய சிவபெருமானுடன் அரசு வீற்றிருக்கும் அழகான கயல்மீன் போன்ற கண்களை உடைய அமுதம் போன்றவளை, பெண்களின் அரசியாக விளங்குபவளை, எம் அன்னையாகிய மீனாட்சியம்மையைக் காத்தருளுக.

## 2. சிவபெருமான்

முத்துப் போன்ற வெண்ணிறமான பற்களை உடைய, எம்முடைய இறைவனாகிய சோமசுந்தரக் கடவுளை நோக்கி, எதிரில் நின்று போர் செய்யும் கண்களும், வாழ்வங்களும் உடைய வெண் தாமரை மலரில் வீற்றிருப்பவளாகிய கலைமகளும் நூறு இதழ்-களைக் கொண்ட செந்தாமரை மலரில் வீற்றிருக்கும்

இலக்குமியும், வழிபடுகின்ற, திருப்பாற்கடலில் தோன்றிய அமுதம் போன்றவளை, கிளிபோலும் மழலைச் சொற்களைப் பேசுபவளை, பாண்டியனின் மகளாக விளங்குபவளை, மதுரையில் வீற்றிருக்கும் மரகதவல்லியை காப்பாற்றுவாயாக.

3. சித்திவிநாயகக் கடவுள்

அருள் தழைத்து விளங்குமாறு தளிர்த்திருக்கும் அழகான கொடி என்று கூறும்படியாக இனிமை பெருக்கெடுத்துப் பாயும் இயல் இசை நாடகம் என்னும் முத்தமிழையும் தெளிவாக உணர்ந்தவளும், மதுரை நகரில் எழுந்தருளி இருப்பவளுமாகிய மீனாட்சியம்மையை காத்தருளுக.

4. முருகக் கடவுள்

ஒலி எழுப்பும் அலைகள் எழும் திருப்பாற்கடலில் மேருமலையை மத்தாகவும், வாசுகி என்னும் பாம்பை கயிறாகக் கொண்டு இறுக்கமாகக் கட்டி தேவர்கள் அனைவரும் பாற்கடலைக் கடைந்ததினால் கடலில் ஆலகால விடம் தோன்றியது.

தேவர்கள் முதலானோரின் அச்சத்தைப் போக்கி, விடத்தை உண்டு தன் கழுத்தில் விடம் நின்றிடுமாறு அருள் வழங்கிய சிவபெருமானுக்கு ஆசையை உண்டாக்கும் பொருட்டுக் காதில் அணிந்த தோடு என்னும் அணியுடன் பகை கொண்டு, கயல் மீன் போன்ற கண்களை உடைய மீனாட்சியம்மையாகிய குழந்தையைக் காக்கும் முருகப் பெருமானை வணங்குவோம்.

## 5. பிரம தேவர்.

பச்சை மலை ஒன்று பொன்மலையுடன் சேர்ந்து நின்ற பவளப் பெருமலை தன் மனத்தில் இருந்த-தாகக் கருதிப் பரஞ்சோதியின் தலைக்கு அறிகுறியாக நின்ற முடிகளைத் தன்னுடைய மார்பில் அமைத்துக் கொண்டு, பின்பு வேறொரு முடியைத் தன்னுடைய தலையில் அணிந்து, தெய்வ அரசியாக வீற்றிருக்கின்ற அபிடேக வல்லியை, அங்கயற் கண்ணியாகிய அமுதை, காக்கின்ற

பாற்கடலில் ஆதிசேடன் என்னும் பாம்பின்மேல் துயில் கொள்கின்ற திருமாலின் மகனாகிய பிரம்ப தேவனை வணங்குவோம். போற்றுவோம்.

—

## 2. செங்கீரைப் பருவம்

இரண்டு கைகளையும் தரையில் ஊன்றிக்-கொண்டு, கால்களில் ஒன்றை நீட்டி, மற்றொன்றை பின்னோக்கி நீட்டி, தலையை முன்னும், பின்னும் அசைந்-தாடுமாறு செய்வது காப்புப்பருவம். இது ஐந்தாம் மாதத்தில் நிகழ்வதாகும்.

நன்னீராட்டிநீராட்டி மணப்பொடிகளைப் பூசி நெற்றியில் திருநீறு மூன்று கோடுகளாக அமைந்திருக்க அதில் பொட்டுச்சுட்டி ஒன்றை அணிந்து, மாலை அணிந்திருக்கும் உச்சிக் கொண்டையும், தலையணியையும் அமைத்து பாராட்டும் திண்மையுடைய பாண்டிமாதேவியின் பாலை உண்டு, வளர்கின்ற பச்சைக்கிளியே! மலையத்துவச பாண்டி-யனின் திருமகளே செங்கீரை ஆடியருள்க.

Scanned with CamScanner

மனதில் அதிகமான மகிழ்ச்சியையுடைய தந்தையார் அழைப்பதற்கு முன்னர் தவழ்ந்து ஓடிப்போய், மழலைச் சொல் பேசி, அவரின் கையைப்பற்றி, அவர் மார்பில் ஏறி, மடியில் அமர்ந்து, முத்துப் போன்ற பற்கள் உடைய வாயில் தெளிவான நிலவு போன்ற புன்னகை தவழ ஆடுகின்ற பசுமை நிறம் பொருந்திய மயிலே! செங்கீரை ஆடி அருள்வாயாக!.

சக்கரவாள மலையாகிய சுவருக்குப் பக்கபலமாக எட்டுமலைகளை நிற்கச் செய்து, மேருமலையை தூணாக நிற்கச் செய்து, சந்திரன், சூரியன் விளக்குகளை அமைத்து புதிய உணவுப் பொருள்களாகிய இனிமை பொருந்திய அமுதத்தை உருவாக்கி தொடர்ந்து செய்து வரவும், சிவபெருமான் அழிக்கின்ற தொழிலை ஆட்டு வெட்டவெளியில் தில்லையில் உன் முன் நடனமாடவும் சிறந்து வாழ்கின்ற பச்சைப் பெண் குழந்தையே செங்கீரை ஆடியருள்க. தென்னவனான பாண்டியனுக்கு மகளாக வாய்த்தவளே! செங்கீரை ஆடி அருள்க.

இருள் விளங்குகின்ற கழுத்தினையுடைய சிவபெருமானின் மூன்று கண்களும் குளிர்ச்சியுடைய கடைக்கண் பார்க்கின்ற அழகான பார்வையால் தோன்றிய இன்ப வெள்ளமும், உயிர்களை, தளிர்க்க அருள் வெள்ளம் பெருகிவர, பச்சை மயில் போன்றவளே செங்கீரை ஆடியருள்க.

தாமரையாகிய இருக்கையும், பிரம்ம தேவனின் நாக்கும், போற்றுகின்ற, கருமையா மனையும், வாளை மீன்கள் மோதுவதால் மொட்டுகள் விரிந்து தாமரை மலரிலிருந்து தேன் அருவி வழியும் மதுரையில் கோயில் கொண்டிருக்கும் மரகத வல்லியே செங்கீரை ஆடியருள்க.

# 3. தாலப்பருவம்

குழந்தையைத் தொட்டிலில் கிடத்தி நாவை அசைத்துப் பாடுவது. ஏழாம் மாதத்தில் பாடப்படுவது.

பாண்டிய மன்னனால் வளர்க்கப்பட்ட தமிழ்மொழி தோற்றம் பெற்ற பொதிகைமலையில் தமிழோடு தோன்றிய தென்றல் காற்று வீசுவதும், மரநிழலில் உறங்கும் தன் கன்றினை ஈன்ற எருமைமாடுகள் அதனை நினைத்து மடியிலிருந்து ஒழுகும் பால் அருவி பெருக்கெடுத்துப் பரவவும், திருப்பாற்கடலில் தோன்றியவளாகிய இலக்குமியைப்போல் விளங்கும் மதுரையில் உள்ள அரசியே தாலே தாலேலோ

சிறிய பசுமையான ஆடை இடையை வருத்தம் கொள்ளச் செய்யவும், விளையாட்டிற்காகக் கட்டப்படும் சிறிய வீட்டில் குடிபுகுந்து, மாணிக்கக் கல்லாகிய நெருப்பை இட்டு, பவளக் கொடியாகிய விறகினை அடுக்கி தேனை உலையாக ஊற்றி, முத்தாகிய அரிசியை உலையில் இட்டு, வடித்து எடுத்து, வயலில் வேலை செய்கின்ற மகளிர் சிறுசோறு சமைக்கும் குளிர்ச்சி பொருந்திய பெரிய பண்ணைகளை உடைய மதுரை நகரின் அரசியே! தாலோ தாலேலோ.

கருமேகக்கூட்டங்கள் கடல்நீரைக் கவர்ந்து, கங்கை ஆற்றங்கரையிலுள்ள கற்பகப் பூஞ்சோலை அமைந்த கழிமுகத்தைக் கடந்து, சந்திரனின் களங்கத்தைத் தடவி, நட்சத்திரக் கூட்டத்தைச் சிதைத்து வானின் உச்சியைத் திறந்து, கடல்நீரைக் கலக்கி வாளைமீன்கள் வலிமைமிக்க சுறா மீன்களோடு விளையாடும் வயல்களை உடைய மதுரைக்கு அரசியே! தாலோ தாலேலோ!

குங்குமச் சேறு அழுக்கி யானையின் ஓட்டத்தைத் தடுக்கும் பெரிய வீதியில் அரசர்களின் பெரிய வலிமையான தேர் ஒதுங்குமாறு சிறிய தேரை உருட்டி விளையாடுகின்ற மதுரைக்கு அரசியே! அருள் கொண்ட பார்வை உடையவளே! தாலோ தாலேலோ!

பெண்களின் கூந்தலில் தங்கியுள்ள இசையுடன் கூடிய வண்டுகள் நிறைந்து கலக்கவும், சுகாய் பூஞ்சோலையில் கறைபடிந்த சந்திரன்மேல் துள்ளிக்குதிக்கும் ஆண் குரங்கின் ஓசைக்கு, உழவர்கள் பிணையாகக் கட்டப்பட்டுள்ள போர் செய்யும் கொம்புகளையுடைய எருமைக் கடாவுடன் சேர்ந்து இடியான் ஒலி முழக்கம் புரியும் வயல்களையுடைய தமிழ் பயிலும் மதுரைக்கு அரசியே அங்கயற் கண்ணியே தாலோ தாலேலோ!

---

## 4. சப்பாணிப் பருவம்

குழந்தை தன்னுடைய இரண்டு கைகளையும் சேர்த்துத் தட்டி ஒலி எழுப்புகின்ற பருவம். ஒன்பதாம் மாதத்தில் நிகழக் கூடியது.

எட்டுக்கண்களையுடைய பிரம்மனும், திருமாலும் இரவில் தூங்கும் கருமையான இருள் சூழ்ந்திருக்கும் இரவுக் காலத்தில், மேருமலையும், சக்கரவாக மலையும் அழியுமாறு நடனம் ஆடுகின்ற ஊமத்த மாலையை அணிந்திருக்கின்ற சிவபெருமான் தாளத்திற்கு ஒப்புமை கூற இயலாதவாறு கைகொட்டி அருள்கின்ற வளர்கொடி போன்றவளே! சப்பாணி கொட்டி அருள்வாயாக.

Scanned with CamScanner

சிவபெருமானை நேரில் கண்ட பொழுது அன்னையே! உன் கடைப்பார்வை அமுதம் பெருகவும், உண்மையாக உள்ளத்தில் தோன்றிய நாணத்துடனும் விளங்குகின்ற தமிழுடன் பிறந்து, மதுரையில் வளர்ந்த கொடியே சப்பாணி கொட்டியருள்க.

அழகான சோலையில் விளையாடும் பெண்களுடன் சேர்ந்து சிறுசிட்டிகளில் மண் இட்டுச் சமைத்த சிறுசோறு ஆக்கிய விளையாட்டும், மயில், அன்னம், புறா இவற்றின் குஞ்சுகளை வளர்த்தும், பெண்களின் கண்களைப் பொத்தி விளையாடவும், கழங்கு கொண்டு விளையாடியும் திகழ்கின்ற கொடி போன்றவளே சப்பாணி கொட்டியருள்க.

ஒளிமிக்க இந்திர விமானமும், துவாத சாந்த பீடமும், கடம்ப மரங்கள் நிறைந்து விளங்கும் காடும், குளிர்ச்சி பொருந்திய வயல்களும், அறுகால் பீடமும் இறைவனின் அழகிய படுக்கையைத் தொட்டிலாகக் கொண்டு உறங்குகின்ற பெண்ணரசியே சப்பாணி கொட்டியருள்க.

முருகப் பெருமானை காலில் வைத்தி, நீராட்டி நெற்றியில் திருநீறு பூசி, பாலை சங்கில் ஊற்றி உண்ணச்செய்து, உடலில் வாசனைப் பொடியைத் தூவி, பூசி, தொட்டிலில் இட்டு தாலாட்டுப் பாடி உறங்கச் செய்கின்ற அம்மையே சப்பாணி கொட்டியருள்க. தமிழொடு பிறந்த மதுரையில் வளர்ந்த கொடியே சப்பாணி கொட்டியருள்க.

# 5. முத்தப்பருவம்

குழந்தையிடம் முத்தம் தருமாறு வேண்டுவது. பதினொராம் மாதத்தில் பாடப்படுவதாகும்.

பழம்பாடல்களாகிய பல பொருட்களைச் சேர்த்த பெரிய செல்வந்தர்கள் தேடி வைத்திருக்கின்ற தெய்வமணியே! அருட்பழம் கனிகின்ற மலர்களை உடைய கற்பகமே! இனிமையான மழலைச் சொல் பேசும் சோலையிலுள்ள கிளியே! சாந்தத் தானத்தில் தோன்றிய சுடர்ப்பொருளே! முத்தம் தருவாயாக.

அடியார்களின் மனக்குளத்தில் சுரக்கும் அருள் வெள்ளமே! பெரிய பேறாக இருப்பவளே! பெண் யானையே! பூங்கொத்தைப் போன்றவளே! கோவைப் பழம் போன்ற வாயால் முத்தம் தருவாயாக.

சிறிய கணுக்களையுடைய கரும்பும், செந்தாமரை மலரும், கர்ப்பம் உடைய சங்கும், பாக்குக் குலையும், பெரிய மூங்கிலும், யானைத் தந்தங்களும் என இவை அனைத்தும் ஒப்புமை கூற முடியாத முகத்தையுடைய-வளே! உன்னுடைய கனி போன்ற வாயால் முத்தம் தருக.

இந்திரனின் அரண்மனையில் இருக்கின்ற ஒளி குறையாத இயல்புடைய சிந்தாமணியும், சங்கநிதி பதுமநிதி என்னும் இரண்டு மணிகளும், திருமாலின் மார்பில் அணிந்திருக்கின்ற கௌத்துப மணியும் இவற்றைத்
எனக்கு தந்து முத்தம் தருக.

குமரித் துறைமுகத்தில் உண்டாகின்ற முத்தும், முத்துக்குளிக்கும் தொழில் செய்பவர்கள் மூழ்கி எடுக்கும் சிப்பிகள் இருக்கும் முத்தும், தாமிரபரணி ஆற்றின் முத்தும், பொதிய மலையில் இருந்து கிடைக்கும் முத்தும், அழகான கூந்தலையும் பெற்றுள்ளவளே முத்தம் தருவாயாக.

## 6. வருகைப்பருவம்

குழந்தையை நடந்துவருமாறு அழைப்பது. வாரானைப்பருவம் என்றும் அழைக்கப்படும். பதின்மூன்றாம் மாதத்தில் பாடப்படுவது.

காலில் அணிந்திருக்கும் அழகான சிலம்பு ஒலிதரவும், கிண்கிணி ஒலிக்கும் சிறிய அடிகளை எடுத்து வைத்து நீ நடக்கின்ற அழகிய நடையும், அன்னப்பறவையும் தெய்வப் பெண்களும் பின் தொடர்ந்து வர, மணிமேகலை என்னும் இடை அணி ஒலி எழுப்ப, தமிழ்மொழி பழகும் மதுரை நகரில் குடிகொண்டுள்ள இறைவியே! அங்கயற்கண்ணி அம்பிகையே வருக!

திருப்பாற்கடல் பெற்றெடுத்த இலக்குமியும், கலைமகளும் போற்றுகின்ற, அடியார்களின் மனதில் எழுந்தருளியிருக்கின்ற மாணிக்க வல்லியே! கரும்புகாடுகள் உள்ள மதுரையில் எழுந்தருளியிருக்கும் தோகை உடைய மயில் போன்றவளே! வருக!

பலாமரத்தின் பழங்கள் தென்னை மரத்தின் மூன்று புறமும் புடைத்திருக்கும் தேங்காய் சிந்துமாறு தாக்கி வளம் தரும் மருதநிலம் உடைய எட்டுத் திசைகளும் மெச்சுமாறு குதித்துக் கயல் மீன் பாய்கின்ற வரப்புகள் நெருங்கிய பெரிய வயல்களையுடைய பாண்டியனின் மகளே! வருக!

ஆகாயத்தில் ஓடும் உயர்வான அலைகளை உடைய பெரிய கங்கை ஆறு சோணை நதியாகச் சிவனின் மகுடமான சடையால் பாதத்தின் அடிபட அழுத்துகின்ற பச்சை நிறமுள்ள பூங்கொடியே! மணமுள்ள காற்று வீசும் அகலமான பூக்களை உடைய சோலைகள் சூழ்ந்த மதுரையில் வளர்கின்ற பாண்டியனின் மகளே வருக!

# 7. அம்புலிப் பருவம்

நிலவை குழந்தையுடன் விளையாட வருமாறு அழைக்கும் பருவம். பதினைந்தாம் மாதத்தில் பாடப்படுவது.

இனிமையான மழலை மொழி பேசும் கிளியை பொருந்திய கிளியாகிய இவளுக்குக் கலாபேதம் என்று உன்னைக் கலைகளும், வேதங்களும் கூறையிடுவதைப் பார்த்து இறைவனின் சடைமுடியால் இருப்பதைப் பார்த்தோ. பாற்கடலில் தோன்றிய இலக்குமியாகிய தோழியுடன் நீ பிறந்திருப்பதை கருதியோ. இவள் உன்னை அழைக்கும் தன்மையைப் பெற்றாய். ஆகவே சந்திரனே! சிவபெருமானுடன் இணைந்திருக்கும் மாணிக்கவல்லியுடன் நிலவே விளையாட வருக.

தேவர்களின் கூட்டம் கசக்கிப் பிழிந்து சுவைத்து உமிழ்ந்த சக்கை நீ என்றும், இராகு என்னும் கரும்பாம்பு கக்கிய எச்சில் என்றும், சய நோயுடையவன் என்றும், உன் பாவத்தைப் போக்கக் கூடிய இடம் மதுரையே தவிர வேறிடமில்லை. ஆகவே நிலவே நீ எம் தலைவியுடன் விளையாட வருவாயாக!

கீற்றுப் போலப் பிறையாக நிலவு தோன்றுகின்ற காலத்தில், பெண்கள் தங்களின் திருமணம் விரைவில் நடைபெற எருவைப் பிட்டு வைத்து வழிபாடு செய்யுமாறு இருந்தும், கிரணங்களை உகுத்த முழுநிலவு என்று தோன்றிய காலத்திலும் மீனாட்சியம்மையின் முக அழகைக் கைப்பற்றிக் கொண்டாய். எனினும் அம்மை உன்னை அழைக்கின்றாய். விளையாட வருவாயாக.

வான்முழுவதும் தெரியுமாறு நீ இருப்பதனால் உனக்குப் பகையாகிய பாம்பு விழுங்கவும், கக்கவுமான துன்பத்திற்குள்ளாவாய். சூரியனால் உன் ஒளி மங்கும். சிவனின் தலையால் இருக்கும்பொழுது அங்கு பாம்பு இருப்பதனால் துயில் இழப்பாய். கங்கையாணால் துன்பம் அடைவாய். ஆனால் எம் தலைவனை அடைந்தால் துன்பங்கள் நீங்கி எல்லா உலகங்களையும் பெறுவாய். ஆகவே மாணிக்க வல்லியுடன் அம்புலியே விளையாட வருக.

அம்மையான் புகழானது எல்லா இடங்களிலும் நிறைந்திருப்பது. அவ்வொளியால் நீ சிறிதளவு அள்ளிக்கொண்டு வெண்மையான ஒளியைப் பெற்றாய். அதனால் குளிர்ச்சி தன்மை அடைந்தாய். ஆகவே பெரிய யானைப் படையைக் கொண்டிருக்கின்ற பாண்டிய மன்னன் மகளுடன் அம்புலியே விளையாட வருவாயாக.

---

## 8. அம்மானைப் பருவம்

மூன்று பெண்கள் பெண்கள் ஒன்று கூடி விளையாடும் அம்மானைக் காய் விளையாட்டை அடிப்படையாகக் கொண்டு விளையாடுவது. பத்தொன்பதாம் மாதத்தில் பாடப்படுவது.

ஆண் யானையின் வயிறு நிரம்புமாறு உணவை உருட்டிக் கொடுப்பது போலவும், தேவர்களின் துன்பம் தீர்க்கும் முகமாக அமுத கலசங்களை மேலே எடுத்து எறிவது போலவும், முத்தால் செய்யப்பட்ட பந்துகளை எறிவது போலவும், தாமரைப் பூவால் தாங்கி எழுந்து ஒலி எழுப்பிய வண்டு கூட்டங்கள் எனவும், வையையாற்றுத் துறைகளை உடைய தலைவியே அம்மானை ஆடியருள்வாயாக.

சிவபெருமான் மீது திருமணைப்பந்தலில் எடுத்து வீசப்படும் வெண்மை நிறமான அமுத உருண்டைகள் மீது புரளும் வண்டினம் என்று தோன்றுமாறும், வானிலுள்ள சந்திரன் மீது இருக்கும் களம்பருவமான் என்று கூறுமாறும் தாயே அம்மானை ஆடியருள்க.

அருள் வெள்ளம் பெருக்கெடுக்கவும், இவைப் போல வெண்மை நிறம் பெற்றும், நன்மை தருவதாகிய முத்து அம்மானை சாத்விகம், இராசதம், தாமதம் என்னும் மூன்று குணங்களால் வந்த உலகப்பற்றுதனை நீக்கிக்-காட்டவும், உம் அன்பில் உருகும் அடியார்களின் விருப்பு உக, அம்மானை ஆடியருள்க!

ஒலி எழுப்பும் அருவி பெருகு மலையிலுள்ள முத்து, வயிரம், மாணிக்கம் ஆகியவற்றின் குவியலை அள்ளிக்கொண்டு, அலைகளால் எடுத்து வீச நான்கு கொம்புகள் உடைய ஐராவத யானை ஓலமிட்டு ஓடுவதற்கு இடமான அலைகள் பொருந்திய வைகையாற்றுத் துறை-களையுடைய பெண் அன்னமே! சிவனுடன் கலந்து ஒருபாகமாக நின்றவளே! அம்மானை ஆடியருள்க.

உன்னுடைய தோழிகள் கையில் எடுத்து ஆடுகின்ற உன் முத்து அம்மானையைப் பிடித்துவீசி இடதுபுறமும் வலதுபுறமும் ஓடி நிமிர்வதற்கு முன்பு, ஓராயிரம் அம்மானைக் காய்களை எடுத்து வீச, அவை வரிசை வரிசையாக வானத்தில் நிற்பது அம்பிகையே நீ பெற்றெடுத்த எல்லா அண்டங்களும் வரிசையாக நிற்பது போல உள்ளது.

அமராவதியும், அளகாபுரியும் ஏக்கம் கொள்ளுமாறு வளம் பொருந்தி விளங்கும் மதுரை நகரின் தலைவியே! அம்மானை ஆடி அருள்க!

Scanned with CamScanner

# 9. நீராடல்

பாட்டுடைத் தலைவியை நீராட வருமாறு அழைத்தல்

அலைகளையுடைய கடலில் உள்ள சங்குகள் முழக்கம் செய்யவும், கயல் மீன்கள் புரளவும், வண்டுகள் சூழ்வதினால் பாசிக்கூட்டம் எழவும், பெரிய யானைகள் வேறான வெள்ளை யானையுடன் முட்டுமாறு செய்து எட்டுத்திசைகளிலும் உள்ள திசை யானைகளைப் பந்து போல் வீசி எறிந்து விளையாடுகின்ற வைகையின் பெரிய நீர்த்துறையில் வெள்ள நீரில் நீராடியருள்க.

சங்கு வளையல்கள் ஒலி எழுப்பவும், உடைகள் நெகிழவும், கண்கள் குவளை மலர் போன்று விளங்கவும் கூந்தல் சரியவும் உயர்ந்து விளங்கும் வைகையாற்றில் பெருகிவரும் புதிய வெள்ள நீரில் மூழ்கி அருள்வாயாக.

கிளிபோல மழலைமொழி பேசுகின்ற பாவை போன்றவளே!

பவளக்கொடியின் அழகு பசுமையான இளம் கொடியின் தோற்றமாக மாறவும், முத்துகள் பசுமை நிறமுடைய மரகதக் கல்லாகத் தோற்றமளிக்கவும், அன்னப்பறவையின் சிறகுகள் மயில்தோகையின் அன்னமாக மாறவும் எல்லாப் பொருள்களும் உன்னுடைய வடிவமே என்று ஒலி எழுப்பும் சரசுவதியும், யமுனையும், கங்கையும் ஒன்றாகக் கலந்து விளையாடுவது போலத் தோன்றும் வைகையாற்றின் புதிய வெள்ள நீரில் நீராடியருள்வாய்.

வண்டுகள் உறங்குவதற்கு இடமான கூந்தலை உடையவளே! அதிகமான நீர்ப் பெருக்குடைய வைகை யாற்றின் பெரிய நீர்த்துறையில் குளித்து மகிழ்ந்து அம்பிகையே நீராட அருள்க!

குளிர்ச்சி பொருந்திய நீர்த்துளிகள் தெறிக்குமாறு மூழ்கி நீராடுகின்ற நீர்த்துறையில் பலதுறைகளை உடைய தமிழுடன் கலைமகளாகிய தோழி குளித்து நீருக்குள் பாய்ந்து மறைகின்ற காலத்தில் அக்கலைமகள் என நினைத்து

நீ பெண் அன்னத்தை ஒழுப்படிப்பது தாயே! உன் ஒளி பொருந்திய சிலம்பின் ஒலியும் மென்மையான நடையும் கவர்ந்து கொண்டது. கங்கையாற்றில் முத்துப் பந்து ஆடவும், கழற்சிக் காய் ஆடவும் தெய்வத் தன்மை பொருந்திய வைகையாற்றில் நீராட அருள்க.

—

## 10. ஊசல் பருவம்

பாட்டுடைத் தலைவியை ஊஞ்சலாடுமாறு வேண்டும் பருவம். இருபத்தொராம் மாதம் பாடப்படும்.

ஒளி ததும்புகின்ற நிலவுடைய சிவந்த மாணிக்கப் பலகையில் புகுந்து ஆடுகின்ற அம்மையே உன்னுடைய தோற்றம் சூரியமண்டலத்தில் வளர்கின்ற அரிதான பெரிய ஒளியை ஒத்து விளங்க, பழமையான பாடலாகிய வேதமாகிய பறவை முழங்குமாறு தோன்றக் குடி புகுந்திருக்கின்ற சுந்தரவல்லியே! பொன்னூசல் ஆடியருள்க.

பொன்னாலாகிய மதில்களை உடைய மதிுரையில் நிறைந்திருக்கும் அழகான பாவை போன்றவளே! பொன்னூஞ்சல் ஆடியருள்க.

உதிக்கிய பசுமையான பொன் போல ஒளிபெறும் பொன்னூஞ்சலில் அமர்ந்து உதைத்து ஆடுகின்ற அமுதவ...யே! எழுந்து விளங்கும் செந்நிறமான ஒளியுடன் இளமையான சந்திரன் விளங்குவது உன் முகத்தின் அழகை விரும்பி ஒரு நாக்குகளை உடைய நெருப்பில் நின்று சந்திரன் தவம் செய்வதை ஒத்து விளங்கும் மதுரபுரியில் வாழும் இளமையான கிளியே! பொன்னூஞ்சல் ஆடியருள்க.

Scanned with CamScanner

கங்கையை முடியில் அணிந்திருக்கும் சிவபெருமான் அசைந்தாடும்படி அவருடன் சேர்ந்து பொன்னூசல் ஆடுகின்ற தலைவியே! பொங்கி வருகின்ற சாலைகளை உடைய இனிமையான மதுரைக்குத் தலைவியே! பொன்னூஞ்சல் ஆடி அருள்க.

சிவபெருமான் மகிழ்ச்சியடையும்படி பாட்டுப் பாடி ஊஞ்சலில் ஆடுகின்ற அமுதவல்லியே! நீ ஆடுவதால் வானம் வளைவுபட்ட பல அண்டங்களும் ஆடுவது போல் தோற்றமளிக்கின்றது. புழுகாகிய நெய்யணிந்த சொக்கருக்கு அழகாக விளங்குகின்ற கொடியே! பொன்னூஞ்சல் ஆடி அருள்க.

---

## அலகு - 4. தமிழ் விடு தூது.

பிற்கால இலக்கியங்களில் சிற்றிலக்கியங்கள் சிறப்புப் பெற்றவையாகும். சிற்றிலக்கியங்கள் தொண்ணூற்றாறு என்று பாட்டியல் நூல்கள் கூறுகின்றன. இவைகளுள் பள்ளு, குறவஞ்சி, தூது, உலா, பிள்ளைத்தமிழ், அந்தாதி, கலம்பகம் போன்றவை புகழ் பெற்றவையாகும்.

சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்றான தூது இலக்கியம் சிற்றிலக்கிய காலத்திலும் பிற்காலத்திலும் செல்வாக்குடன் திகழ்ந்த இலக்கிய வகையாகும்.

பிரபந்தத் திரட்டு வெண்பா, அன்னம், மயில், கிள்ளை, மேகம், நாகணவாய்ப்புள், தோழி, குயில், நெஞ்சம், தென்றல், வண்டு என்னும் பத்துப் பொருள்களும் தூதுக்கு உரியவை எனக் கூறுகின்றது.

தூது இலக்கிய நூல்களுள் செறிவும் இனிமையும் மிக்கதாய்த் தனித்தன்மையுடன் திகழ்வது 'தமிழ் விடு தூது' ஆகும். மதுரையில் கோயில் கொண்டிருக்கும் சிவபெருமானின் மீது காதல் கொண்ட பெண் ஒருத்தி தன்னுடைய காதலைச் சிவபெருமானிடம் கூறுமாறு தமிழைத் தூதனுப்பிய பொருளில் பாடப்பட்டது.

Scanned with CamScanner

கலிவெண்பாவால் இயற்றப்பட்டு 268 கண்ணிகளை உடையது. இந்நூலின் ஆசிரியர் யார் எனத் தெரியவில்லை. தொடக்கம் முதல் இறுதிவரை தமிழ்மொழியின் சிறப்பு எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

1. * <u>தமிழ்விடுதூது</u> <u>வாயிலாக</u> <u>அறியலாகும்</u> <u>தமிழ் மொழியின்</u> <u>சிறப்புகள்</u>

சிறப்பு மிக்க மதுரையில் தமிழ்ச் சங்கத்தில் புலவராக வீற்றிருந்ததும், தமிழரசி என்று போற்றுகின்ற மீனாட்சியாகவும், சிவஞான போதத்தின் சுவடுகளில் ஒன்றை எடுத்த கணபதியாகவும், முருகக் கடவுளாகவும், இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழையும் எடுத்துக் கூறியவராகிய அகத்திய முனிவராகவும், தொல்காப்பியனாகவும், திருமந்திரம் என்னும் மறைநூலால் ஒழித்த வலிமை உடையவராகிய திருமூலரும், தெய்வமொழிப் புலவராகிய திருவள்ளுவராகவும் கல்வி கேள்விகளில் சிறந்த அனைவரும் தமிழ்மொழியே நீயாக இருந்ததனால் உன்னை வணங்குகின்றேன்.

* <u>குலம்</u>: தமிழ்மொழியே!

எந்தக்குற்றமும் பிறக்காமல், குறைக்காமல் உயிருக்குள் உயிராய் நின்றாய்! என்னும் வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, மருட்பா என்னும் ஐந்து குலமாக வளர்ந்தாய்.

உயிர் எழுத்துக்கள் பன்னிரண்டு, மெய்யெழுத்துக்கள் முப்பதாகவும், உயிர்மெய் (216), உயிரளபெடை (7), ஒற்றளபெடை (11), குற்றியலுகரம் (1), குற்றியலிகரம் (1), ஆய்தம் (1), ஐகாரக் குறுக்கம் (1), ஔகாரக் குறுக்கம் (1), மகரக்குறுக்கம் (1) எனச் சார்பெழுத்துகள் 240 ஆகப் பிறந்தாய். மேலும்

எண், பெயர், முறை, பிறப்பு, உருவம், மாத்திரை,

முதல், எ.று, கடைநிலை, போலி, பதம், புணர்ச்சி, என 12 பகுவங்களாகவும், அறம், பொருள், இன்பம் என்னும் மூன்று பால்களை அருந்தியும், காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம் வருகை, அம்புலி, சிற்றில், சிறுபறை, சிறுதேர் எனப் பத்துப் பருவங்களாகவும் வளர்ந்தாய்.

* அழகு !. செய்யுளுக்கு அழகு செய்கின்ற இயற்சொல், திரிசொல் திசைச்சொல், வடசொல் என்னும் சொற்கள் நான்காகவும், கைக்கிளை, குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல், பெருந்திணை ஆகிய அகத்திணைகளும், வெட்சி, காஞ்சி, வஞ்சி உழிஞை, நொச்சி, தும்பை, வாகை என்னும் புறத்திணைகளும் உன்னிடத்தில் தோன்றியவையே.

* சுவை:

வீரம், அச்சம், இழிப்பு, வியப்பு, காமம், அவலம், உருத்திரம், நகை, சாந்தம் என்னும் ஒன்பது சுவைகளாகிய பெற்றிருந்தாய்.

மண்ணுலகிலுள்ளவர்கள் புகழும்படி இறைவன் மல மலை, கடல், நாடு, நகர், வைகறை, காலை, நண்பகல் எற்பாடு, மாலை, யாமம் எனவும், கார்காலம், கூதிர்காலம் முன்பனிக்காலம், பின்பனிக்காலம், இளவேனில் காலம், முதுவேனில் காலம், ஆறு, கதிரவன், நிலவு ஆகிய வர்ணனைகள் பதினெட்டை -யும் பெற்று மகிழ்ந்திருந்தாய்.

இறையருள் பெற்ற திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் உள்ளிட்ட பலர் பாடிய பன்னிரு திருமுறைகளும் உன்னைப் பற்றியுள்ளவையே.

* காப்பியங்கள்

இலக்கண நூல்களைக் கற்றறிந்து புலவர்கள் பாடிய சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி என்னும் காப்பியங்களும் பண்டைய புலவர்கள் பாடிய பத்துப் பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு நூல்களும், சிற்றிலக்கியங்களும் நீ படைத்த இலக்கிய நூல்களே.

இனிமை தரக்கூடிய அமுதமாய், தெளிவான அமுதத்திற்கும் உயர்வான முக்தியைத் தரக்கூடிய கனி போன்ற தமிழ் மொழியே! நீ பார்த்திடாத வண்ணங்கள் உண்டா?

தூங்கிசை வண்ணம், ஏந்திசை வண்ணம், அடுக்கிசை வண்ணம், பிரிந்திசை வண்ணம், மயங்கிசை வண்ணம், ஆகிய வண்ணங்களைப் பெற்றுள்ளாய்.

*ஒன்பது சுவைகள்;*

நாவானது பெற்ற சுவைகள் இனிப்பு, புளிப்பு, கசப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, கார்ப்பு என ஆறேயாகும். அதைவிட வேறு சுவைகள் இல்லை. ஆனால் நீயோ செவிகளுக்கு உணவாக அமையும் நகை, அழுகை, இழிவு, வியப்பு, அச்சம், பெருமிதம், கோபம், மகிழ்ச்சி, சாந்தம் ஆகிய ஒன்பது சுவைகளைக் கொண்டிருக்கிறாய்.

அறம், பொருள், இன்பம் என்னும் மூன்று பால்களைக் கொண்டிருப்பதோடன்றி, ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் என்னும் ஐந்து பால்களையும் பெற்றதோடு அல்லாமல் முப்பது சீர்களையும் பெற்றிருக்கின்ற செல்வம் நீ.

ஆண்பனையைப் பெண்பனை ஆக்கினாய். பெண்களுக்குள் காரைக்கால் அம்மையாராகவும், ஔவையாராகவும் வந்து பிறந்தாய். நற்பண்புகள் உடைய திலகவதியாகவும் பிறந்தாய்

2. *தூது விடுப்பதற்குரிய காரணங்கள்;*

தமிழ் மொழியே உன்னை சிவபெருமானிடம் தூது விடுப்பதற்குரிய காரணங்கள்.

(1) ஒளி பொருந்திய தாமரை மலரில் வாழும் அன்னப் பறவையினைத் தூதாகவிடுப்பேன். ஆனால் அன்னப் பறவை அங்கு உள்ள சொக்கநாதரை இன்னும் கண்டறிந்தது இல்லை.

Scanned with CamScanner

(2) ஓர் வண்டைத் தூதாக அனுப்பி சிவபெருமான் காமம் குறித்துப் பேசாதே என்றால் அது நினைத்து நிற்கும்

(3) அழகு பொருந்திய குயிலை நான் தூதாக அனுப்புவேன் அக்குயிலும் காக்கையின் இனம் சார்ந்தது; அதனால் வாலியான் என்னும் காக்குருவிக்கு அச்சம் கொண்டு அவர் அருகில் செல்லாது.

(4) மானை சிவபெருமானிடம் தூதுசொல்லிவா என்று அனுப்புவேன். அவ்வாறு அனுப்பினால் புலித்தோல் உடுத்திய அவரைக் கண்டு அச்சம் கொண்டு அவரிடம் செல்லாமல் வந்துவிடும்

(5) என் மனத்தையே தூதாக விடுக்கலாம் என்றால் என்னுடைய மனமும் மனத்திற்கு எட்டாத அவரைக் கண்டு தூது செல்லாது.

இறுதியாக யாரைத் தூது அனுப்பலாம் என எண்ணிய பொழுது உன்னுடைய நினைவு வந்தது. ஆகவே எனக்கு நீ சிவபெருமானிடம் தூது சென்று உதவுவாயாக.

(6) நீ தூதாகச் சென்றாலும் முன்னோர்கள் படைத்த பத்தொன்பதாயிரத்து இருநூற்றுத் தொண்ணூற்று ஒன்று என்னும் எண்ணிக்கையிலான தொடைகளுக்கு உரிமை பெற்றுள்ளாய்.

(7) அவற்றில் எனக்காக ஒருமாலை (தொடை) வாங்கி வந்து என் துன்பத்தை தீர்க்க முயற்சிப்பாயாக.

(8) முன்னாளில் சிவபெருமான் தருமிக்காக இரக்கம் கொண்டு அவனுக்கு வாழ்க்கை கொடுப்பதற்காக பொற்கிழியைப் பெறும் பொருட்டு கொங்குதேர் வாழ்க்கை எனப்பாடிய பாடலும்,

(9) பாணபத்திரனுக்காகச் சேரமன்னனிடம் சேர்க்குமாறு சீட்டுக்கவி எழுதிக் கொடுத்த சிறப்பானச் செயலும்

(10) வடமதுரைக்கு உனக்குப் பிறகு அந்நாளில் வந்தவர் யார்? இடைக்காடரின் பின் சென்றவரும் யார்? சொக்கநாதன் தானே.

(11) முதியவராக வந்து பாணபத்திரருக்காக விறகு விற்றவரும் சிவபெருமானே.

(12) விரைவாக வந்து நீ அந்நாளில் வைகை ஆற்றில் வேதமாகிய சைவ ஆகமத்தை நிலைபெறச் செய்தாய்.

(13) வடமொழியைக் கற்ற அகத்திய முனிவருக்கு சிவபெருமான் உன்னைக் கற்பித்தார்.

(14) உமையம்மையின் தலைவராகிய சிவபெருமான் முன்னாளில் ஆரூரருக்கு நீ பாடும் பாட்டே எனக்கு அர்ச்சனைப் பாட்டாகும் என்று தமிழ்ப் பாடல் பாடக் கூறியமையால் நான்கு வேதங்களும் மறைந்து ஒதுங்கிச் சென்றுமாறு பித்தன் என்று வைதாய்

(15) பெருமை பெற்ற தமிழ்மொழியே உன்னால்தான் இவ்வுலகில் வாழ்கின்றேன். தேவர்கள் உண்ணும் அமிழ்தமே கிடைத்தாலும் அதனை விரும்பமாட்டேன்

(16) கூன்பாண்டியனின் வெப்பு நோயைத் தீர்த்தாய். அதுபோல கொடுமையான என் காம நோயினையும் தீர்ப்பாய்.

(17) தமிழே! நீ சம்பந்தர் பாக்களைப் பாடியதால் சின்னம், காளம், பல்லக்கு, முத்துப்பந்தல் எல்லாமும் பெற்றாய். பொன்னை ஒத்த தமிழே! அம்முத்துக்கள் என்னைச் சுடாதிருக்குமாறு எனக்கு அணிவிக்க மாட்டாயோ?

(18) முன்னாளில் இறந்த பூம்பாவையின் எலும்பை அழகிய பெண்ணாக ஆக்கித்தந்தாய். அதுபோல நீ காதல் நினைவுகளால் எலும்பான என் உடலையும் அழகிய பாவை போல் ஆக்கித் தருவாயாக.

(19) உடலால் அழிந்தாலும் பெரிய முதலை உண்ட பிள்ளையை அதன் வாயிலிருந்து மீட்டாய். அதனால் நான் இறந்த பின்னும் என்னைப் படைக்கும் சக்தி உனக்கு உண்டு.

(20) எனக்காக மதுரைக்குத் தூது செல்லும் நீ கன்னி-யான திருத்தமான வழியால் செல்வாயாக. நீ எவ்வழியில் சென்றாலும் வெற்றி பெறுவாய்.

நான் உன்னிடம் கூறியவற்றை எல்லாம் இறைவனின் காதில் புரியும்படிக் கூறுவதற்கு உன்னால் மட்டுமே முடியும். உன்னையன்றி வேறு எவருக்கும் இவ்வாறான சொல்லாற்றல் இல்லை.

வானுலகைவிட மேலான சிறப்புகளை உடைய திருவாலவாய் என்னும் மதுரையில் உறையும் சுந்தர பாண்டியனாகிய இறைவனின் சொல்லின்படியே, வந்து என்னை விட்டுப் பிரியாமல் இருந்து கூடி இன்புற்று நல்ல இன்பத்தைத் தருமாறு, என்னை மறந்து விடாமல் தூது சொல்லி மீண்டு வருவாயாக.

இவ்வாறு தலைவி தமிழ்மொழியின் சிறப்பினையும், காரணத்தையும் கூறி தமிழ்மொழியினை தலைவனிடம் தூது அனுப்புகின்றாள்.

# அலகு - 5. திருக்கருவைப் பதிற்றுப்பத்து அந்தாதி

திருக்கருவை என்ற ஊரில் எழுந்தருளியுள்ள இறைவனாகிய சிவபெருமானைப் பற்றிப் பாடியது. இந்நூலின் ஆசிரியர் அதிவீரராம பாண்டியர். இந்நூலில் பத்துப் பகுதிகள் உள்ளன. ஒவ்வொரு பகுதியிலும் 10 பாடல்கள் இடம்பெற்றுள்ளன. இந்நூல் '<u>குட்டித்திருவாசகம்</u>' என்ற பெயரினை உடையது.

1. * சிவபெருமானின் சிறப்புகளை திருக்கருவைப் பதிற்றுப்பத்து வழி அறிதல் (அ)
2. * சிவபெருமான் பக்தர்களுக்கு அருள் புரிகின்ற செயல். (அ)
3. * அதிவீரராம பாண்டியர் சிவபெருமானிடம் வேண்டுவன, அவரின் பெருமைகளை எடுத்துரைத்தல்.
4. * சிவபெருமான் ஆட்கொண்ட திறனை விளக்குதல்

## 1. முதற்பத்து

(1) அழகான தாமரை மலர் போன்ற உன் திருவடிகளை என் உள்ளத்தில் பதித்து, உனது ஆயிரம் திருநாமங்களை எடுத்துக் கூறி, 'திருக்கருவையில் எழுந்தருளியிருக்கும் எமது இறைவனே' என்று துதித்த போது அனுபவத்தறியாத இன்ப நிலையை எனக்கு அருளினாய்.

(2) சீறி ஆடும் பாம்பினை அணிந்த சடையை உடையவரே! திருக்கருவையில் எழுந்தருளியிருக்கும் ஒளிப்பிழம்பே! ஐம்புலன்கள் நீங்கி உனது திருவடிகளைப் போற்றி வணங்க நினைவினைத் தந்தாய்.

(3) ஒளிப்பிழம்பே! வலிய அருள் செய்து, என்னைத் தடுத்தாட்கொண்ட என் உயிர்த்துணையே! பிறவிக்கேடியால் விழுந்து வருந்திய எனக்கு அருள்புரிந்த இறைவனே! உன்னைத் தவிர வேறொரு தெய்வத்தையும் நினைக்கமாட்டேன்.

(4) வேனிற் காலத்து கரும்பு வில்லுக்குரியவனான மன்மதன் எய்யும் காமக் கணைக்கும், மங்கையர்களின் நீலோற்பலம் போன்ற கொடிய கண்களாகிய வலைக்கும் இலக்காகி வருந்தி, இழிவாகிய துன்பக் கடலில் அழுந்திய என்னை ஒரு பொருட்டாக எண்ணி ஆட்கொண்ட ஞானவடிவானவனே.

(5) திருக் கருவையில் எழுந்தருளியுள்ள இறைவனே! பொய்யான உடலைக் காட்டி, நடித்து வீணே அழிந்து போனேன். உன் திருநாமங்களை ஓதியதால் என் பழவினைகள் நீங்கின. பிறவியாகிய துன்பக் கடலை நீந்தி உன் திருவடிகளைத் தெப்பமாக்கிக் கொண்டேன்.

(6) இரவிலும் பகலிலும் கரும்புச் சாற்றின் பாகைப் போலவும், கொம்புத் தேனைப் போலவும், முக்கனியைப் போலவும், சுவை மிக்க பாடல்களைப் பாட அன்ன கூட்டங்கள் வசிக்கும் வயல் சூழ்ந்த கருவாபுரியான் என்னை ஆட்கொண்டது, முற்பிறவியில் செய்த தவப்பயனே.

(7) அடியவர்களுக்கு அருள்புரிகின்ற ஞானசாரியனாய் உள்ளவனை, துன்பம் தரும் பிறப்பினை வேரோடு அறுக்கின்றவனை, அடியார்களுக்கு வேண்டியவற்றைத் தருகின்றவனை, மோட்ச இன்பத்தை அளிப்பவனை, ஒளிப் பிழம்பாகக் காட்சி தருகின்றவனை களாவின் நிழலின் கீழ் வணங்கினேன்.

(8) வணங்கிய கண்கள் ஆனந்தக் கண்ணீர் சிந்தவும், துதிக்கும் மொழியோடு நாத் தடுமாறவும், சிவானந்தமாகிய தெளிந்த நறவினை வாய்மடுத்துத் தெவிட்டாதிருக்கத் திருக்கருவையில் வாழும் ஞானமூர்த்தி திருவருள் செய்தான்.

(9) பாம்பை ஆபரணமாக அணிந்த திருமார்பும், உமையம்மையை ஒருபாகமாகவும், கபாலங்களால் தொடுத்த மாலையும், பிறையை ஒத்த சடையையும், சிவந்த வாயும், நீலகண்டமும், மழுவும் மானும் விளங்கும் திருக்கரங்களும், தாமரை மலர் போன்ற திருவடியும் ஆகிய இவற்றோடு திருக்கழுவையில் எழுந்தருளியுள்ள இறைவன் காட்சித் தருகின்றான்

(10) செந்தமிழ் வழங்கும் திருக்கழுவையில் எழுந்தருளிய இறைவனே! தேவர்களுக்குத் தேவனே! என்னுடைய செயல்கள் அனைத்திற்கும் மூலமாக இருப்பவனே! உன் அடியார்களோடு அடியேனை வாழ அருள்புரிந்ததனை எண்ணி ஆனந்தம் அடைகின்றேன்.

## 2. இரண்டாம் பத்து

(1) இறைவனாகிய உருத்திரனும் திருமாலும் நான்கு திசைகளையுடைய தாமரைப் பூவில் வசிக்கும் பிரமனும் என்றிவர் நிகரின்றி இருக்கும் திருக்கரை நிழலின் கீழ் எழுந்தருளியிருக்கின்ற இறைவனுடைய இரண்டு திருவடிப் புகழ்ச்சியை கூறி போற்றுகின்றேன்.

(2) தாண்டாத விளக்கே! திருக்கழுவையில் எழுந்தருளிய இறைவனே! எந்தப் பிறவியெடுத்தாலும், கொடிய நரகத்தில் விழுந்தாலும், உனது திருவடித் தாமரையின் கீழ் வைக்கும் அன்பென்று சொல்லப்பட்ட அழிவில்லாத பொருளே.

(3) எக்காலத்திற்கும் அழிவில்லாத பொருளாகவுள்ளவனே! வேதத்தின் கொழுந்தே! அலைவீசும் அமுதசாகரமே! ஓய்வின்றித் தந்தருளும் கற்பகக் கனியே! விமலனே! பிறவிக் கடலாகிய துன்பத்தைக் கடக்க உன் திருவடிகளையே தெப்பமாகக் கருதுகின்றேன்

(4) மூன்று கண்களையுடைய தேவனே! உனது திருவடிகளைத் துதித்துத் துன்பத்தை வேரோடறுக்க, என்னை வலியவந்து தடுத்து ஆட்கொண்டமை முற்பிறவியில் நான்செய்த நல்வினைகளோ.

(5) பெரிய பூதங்கள் ஐந்தும் அமைந்த முக்குணங்-களும், அந்தக்கரணங்கள் நான்கும் இவை முதலிய யாவுமாய் உடம்புக்கு ஆருயிருமாய், அவ்வுயிருக்கோர் உணர்ச்சியுமாய் நின்ற ஞான வடிவாகிய இறைவனே! நான் உன்னை உணர்ந்து துதிக்கின்றேன்.

(6) எள்ளில் நிறைந்த எண்ணைய் போல, எவ்விடத்தும் நிறைந்து காணப்படுபவன். முத்தொழிலையும் செய்யும் மூன்று திருவுருவங்களைக் கொண்டவன். வேதத்தின் உச்சியில் இருப்பவன். அவனே என்னைப் பாதுகாப்பவன்.

(7) எனது கற்பாறை போன்ற மனத்தை இளகச்செய்து, உமையம்மையோடு இடபவாகனத்தின் மேலெழுந்தருளி, திருவுருவத்தைக் காட்டி, நல்ல திருவருள் செய்து என்னை வாழ்வித்தாய்

(8) மகுடங்களை அணிந்த அளவிறந்த தேவர்கள் வீழ்ந்து வணங்கும் தாமரை மலரை ஒத்த செவ்விய திருவடி-களின் மேல் என் உள்ளம் நிலைபெற்று, ஆனந்தக் கண்ணீர் சிந்தவும், திருக்கழுக்குன்றிலெழுந்தருளிய பெருமானே! எல்லாப் பொருளையும் கடந்து நின்றவனே! என்று எனது நா துதிக்க புண்ணியஞ் செய்தேன்

(9) குற்றமற்ற சிறப்பினையுடைய கழுவிய மாணிக்கம் போன்றவனே! அடியார்களுக்கு வேண்டிய வரத்தினை அளிப்பவனே! திருக்கழுக்குன்றில் எழுந்தருளிய இறைவனே! நான் வணங்குவது உன் திருவடிகளை. புகழ்வது உன்திரு-நாமத்தை. அடைவது உன் திருவுவெம்

(10) பிறைச்சந்திரனை தலையில் சூடியவனே! சூரியனும், சந்திரனும், பிருதிவியும், தேயுவும், ஆகாயமும், அப்புவும், வாயுவும், ஆன்மாவும் ஆகிய எட்டுவகை

Scanned with CamScanner

திருவுருவமாகியும், அருவமாகியும் இருந்துள்ள இறைவனே உன்னை வணங்குகின்றேன்

## 3. மூன்றாம் பத்தி

(1) இறைவனே! உன் திருவடிகள் மீது ஆசைகொண்டு நிற்க, பொல்லாங்கு செய்யும் மயக்கம் முழுவதும் அகலவும், முத்தமிழ் வழங்கும் திருக்கழுவையில் எழுந்தருளிய பரமனே என்று உன்னைப் போற்றுகின்றேன்.

(2) தொன்றுதொட்டுள்ள புகழ் வாய்ந்த திருக்களா நிழலில் எழுந்தருளிய ஈசன் விபூதியை அணிந்ததால் வெண்மையான திருமேனியுடன் இறைவனின் ஆடும் நடனம் சிறப்புடையது.

(3) களாமரத்தின் நிழலில் எழுந்தருளிய இறைவனே! ஏழ்மை உடையவனும், பாதகம் செய்பவனும், பெண்களை விரும்புகின்றவனும், கொடிய வஞ்சக் குணமுடையவனாகிய என் மனதினை கரையச் செய்து, நின் திருவடிகளைக் காட்டி என்னை ஆட்கொண்டாய்

(4) சூரபத்மனை வேரோடு அழித்தவனும், திருக்கழுவைப் பதியில் எழுந்தருளிய இறைவனை தேவர்களும், முனிவர்களும், கைநின்று எந்நாளும் துதித்து வணங்கும், சிலம்பினை அணிந்த பொன் போலும் அரிய திருவடிகளைத் துதிக்க எனக்கு அருள் புரிந்தாய்

(5) பிரம்மனும், திருமாலும் காணமுடியாத திருவுருத்தில் பாதியை உமையம்மைக்குத் தந்தவனும், திரிபுரங்களை எரித்தவனும், கூரிய அம்பாகத் திருமாலை உடையவனுமாகிய இறைவனே உன்னைப் போற்றுகின்றேன்.

(6) இடபவாகனத்தின் மேல் எழுந்தருளி, கொன்றைமாலை சடையால் அணிந்து, திருக்களா

மரத்தின் நிழலில் அமர்ந்து அடியவர்களுக்கு அருள் செய்கின்ற இறைவனே! உன்னை வணங்குகின்றேன்

(7) மின்னலைப் போல நிலையற்ற பொருளையும், வாழ்க்கையையும் நிலையென்று கருதி அழன்று திரியும் விருப்பத்தால் தளர்ச்சியடையாமல் வாழும் மக்களுக்கு அருள்புரிகின் இறைவனே திருக்கருவை நாதனே! மார்க்கண்டேயனுக்கு நீண்ட ஆயுளைத் தந்தவனே! உன் தாமரை மலர் போன்ற திருவடிகளை நாள்தோறும் வணங்குகின்றேன்.

(8) கொடிய பேய்களின் கூட்டம் துணங்கைக் கூத்தாடிக் குதிக்க, சிவகணங்கள் துதிக்க, மயானத்தில் ஆடும் சிவபெருமானே! உன்னை வணங்கத் தலையைத் தந்தாய். உன்னை வாழ்த்த நாவைத் தந்தாய். அடியவர்களுக்கு அருளினாய். இவை அனைத்தும் நீ தந்தவையே.

(9) இம்மை இன்பத்தையும் மறுமை இன்பத்தையும் தன்னை அடைந்த அடியார்களுக்கு அருளும் இறைவனே! தருமத்தையே திருவடிவமாகக் கொண்டவனே. உமையம்மையினை ஒருபாகமாக உடையவனே. பெருமை வாய்ந்த உனது பஞ்சாக்கர மந்திரத்தையே பெரும் தெப்பமாகப் பற்றி பிறவியாகிய துன்பக் கடலை கடக்க முற்படுகின்றேன்.

(10) திருக்கருவை இறைவனே! நீ உடுக்கும் ஆடைகள் எட்டுதிக்குகள். முக்கண் முச்சுடர். தழைத்த சடை சூரியனுடைய கிரணத் தொகுதி. திருமேனி கொடிய நெருப்பு. ஆடியருளும் அரங்கம் உலகமெல்லாம் வெந்து ஒழியும் மயானம். சேனைகள் பேய்க்கூட்டங்கள். எனினும் இறைவனை விண்ணிலுள்ள தேவர்களும், மண்ணுலகிலுள்ள மக்களும் வணங்குகின்றனர்.

# 4. நான்காம் பத்தி

(1) கனி போன்ற இதழ்களையுடைய உமையம்மைத் தலைவனும், திருக்கருவைப் பதியிலுள்ளவனும், கடலில் தோன்றிய நஞ்சினை அமுதாக உண்டு கொண்டவனுமாகிய இறைவனுடைய திருவடிகளைப் புகழ்ந்து பாட ஆணவம், மாயை, கன்மம் ஆகிய மூவகையான மலங்களும் ஒழிந்தன. செம்மையான ஞானக்கண் திறந்தது.

(2) இறைவனது புகழை எடுத்துப் பாடினேன். அவனது செவ்விய திருவடித் தாமரைகளைத் தலையில் சூடினேன். திருக்கருவாபுரியில் எழுந்தருளிய இறைவனைப் போற்றினேன்.

(3) மக்களே! அறிவு கெடுவதற்கு முன்னமே, சோமசூரியாக்கினி என்னும் மூன்றுகண்களையுடைய தலைவனும் திருமுகம் வாய்ந்த லிங்க வடிவினனுமாகிய இறைவனின் இரண்டு திருவடிகளாகிய தாமரைகளைத் தலையில் சூடுங்கள்

(4) பிரம்மன் போன்றோருடைய மண்டை ஓடுகளை மாலையாக உடையவன். பிறைச் சந்திரனை சடைமுடியில் சூடியவன். தென்திசையிலுள்ள திருக்கருவையில் கோயில் கொண்டருளிய சிவபெருமான், கலங்கும் மனத்தை ஒழித்து என்னை ஆட்கொள்பவன்

(5) திருமால் வணங்க நின்றவனும் உமையம்மையை இடப்பாகத்தில் உடையவனும், கருவாபுரிக்குத் தலைவனுமாகிய சிவபெருமானே என்னை ஆள்பவனும், எனக்கு கருணை புரிபவனுமாவான்

(6) உயிர்களுக்கு இறைவனாக உள்ளவனும், எல்லாப் பொருள்களிலும் நிறைந்திருப்பவனும், உயிர்களுக்கு அருள் புரிகின்ற பெருந்தன்மையுடையவனும், திருக்கருவையில் எழுந்தருளியுள்ள இறைவனுமாகிய சிவபெருமான் என்னை ஆட்கொண்டது இந்திரசாலமே.

(7) மாயமாகிய கெடாத இருள் நீங்க, என் மனதில் ஞானமாகிய ஒளிவீசும் விளக்கினை ஏற்றியருளியவன் திருக்கருவை இறைவனே.

(8) முதல்வனே! உன்னைத் தவிர வேறொரு தெய்வத்தை நாடமாட்டேன். ஆதலால் எனக்கு இறுதி நேர்ந்த காலத்தில், வேத முடியிலிருக்கும் உனது திருவடியாகிய அருட் செல்வத்தைத் தந்தருள்க.

(9) மேருவை வில்லாக உடையவனாகிய களா நிழலில் எழுந்தருளிய இறைவனை, ஒருவன் வாழ்த்த இம்மையால் செல்வம் கிடைக்கும். கவலைகள் தீரும். கல்வியைத் தரும். மறுமையால் மோட்சம் கிடைக்கும்.

(10) இவ்வுலக வாழ்க்கையை ஒரு பொருளாக எண்ணி சிவபெருமானை உணரும் உணர்ச்சி கெட்டு, நரகத்தில் வீழும் புல்லறிவினையுடைய மனிதர்கள் தாழ்ந்த சடையையுடைய களா நிழலில் எழுந்தருளிய இறைவனின் திருக்கோயிலை வலம் செய்க. செய்தால் முக்தி கைகூடும்.

---

## 5. ஐந்தாம் பத்து

(1) பிரமகபாலத்தில் பலி ஏற்ற கெலிங்கநாதனே! இளஞ்சந்திரனை சடையால் சூடியவனே! விரும்பியது கிடைக்கவில்லை என்று மனம் தளர்ந்து வருந்துகிறவர்களைப் போல அருளைப் பெற்றும் பெறாதவர் போல வருந்தா நின்றேன்.

(2) பழமையான வேதங்களுக்குரிய எமது தலைவனே! உன் திருவடிகளைத் தலையில் தாங்கி நிற்கும் பேறு பெற்றேன்.

(3) இளமை தங்கிய இடப வாகனனே! பால்வண்ண நாதனே. தேவர்களுக்கு இறைவனே! ஆசையால் அறிவு மயங்கி வெவ்வேறு உருக்கொண்டு பிறந்து, பிறந்து குயவன் சுழலும் சக்கரத்தைப் போலப் பிறவிக் கடலைக் கடக்க உதவி புரிவாயாக.

(4) மக்களே! இறைவனை, 'திருக்கருவையில் எழுந்தருளிய இனித்த மலையே! கொன்றை மலர்மாலையினைத் தரித்த சடாமுடியையுடைய சிறந்த ஒளிப்பிழம்பே' என்று பலவாறு சொல்லித் தோத்திரப் பாமாலைகள் பலவாயாற பாடிக் கைகூப்பியும், கால்பெயர்த்தும் நாம் ஆனந்தக் கூத்தாடுதற்குச் சிவபெருமானின் அடியவராக வாருங்கள்

(5) இறைவனின் திருவடிகளை வணங்கித் திருத்தொண்டு செய்து, பூசித்துப் பயன் பெற்றவர்கள் இந்திரன், பிரம்மன், திருமால் ஆகியோர். மக்களும் வணங்கினால் பயன் பெறுவர்

(6) பால்வண்ணனே! பரமனே! உனது திருவடியைப் பெற எனது நாத் தெவிட்டத் துதிப்பேன். கைகளால் மலர்கொண்டு பூசிப்பேன். தலையை வளைத்து வணங்குவேன். இரண்டு கால்களால் வலம் வருவேன். மனதினில் உன்னைத் தியானிப்பேன். அகமும் புறமும் ஒருசேர உருகித் துதிப்பேன்.

(7) அகத்திய முனிவருக்கு வெற்றியை அருளியவனே! முகலிங்கனே! தும்பை மலரை முடியிற் சூடியவனே! துன்பம் வாய்ந்த மனத்தையுடையவர் போல. நெடுநாளாக மனம் மெலிகின்றேன். என்னைப் பாதுகாப்பாயாக.

(8) மூன்று உலகமும் வணங்கித் துதிக்கும் முகலிங்கனே! அனைத்திற்கும் முதல்வனே! என்னிடத்திலுள்ள மலக்குற்றத்தை ஒழித்து, உன் திருவடியைப் பெற்று உய்வேன்

(9) ஞானத்தை விரும்புவோர்க்குத் திருவருள் புரியும் இறைவனே! எந்நாளும் பெண்களோடு புணரும் புணர்ச்சியின் மயக்கத்தை விரும்பியும், மனவலிமையிழந்து சோர்கின்றேன். எனக்கு அருள்புரிவாயாக.

(10) இறைவனே! உன்னை உணர்ந்த சிவஞானிகளுக்கு எள்ளுள் எண்ணெய் போல நீங்காது நிறைந்தருளுவாய். எனக்கும் அருள்வாயாக.

# ௬. ஆறாம் பத்து

(1) வேதங்களின் ஓசையும், ஆரவாரப் பெருக்கும், வீணை முதலிய வாத்தியங்களின் ஒலியும் நீங்காது நிறைந்த திருக்கருவையில் எழுந்தருளிய இறைவனே! எனக்குள்ள ஆசைகளும், கவலைகளும் கோடி கோடியாகப் பெருகுகின்றன. அதனை நீக்குவாயாக.

(2) தேவனே! திருவுருவமாகவும், உருவம் அற்றவனா-கவும் நிற்கின்றாய் வேதமாகி நிற்கின்றாய் இவ்வாறு நீ இருப்பதினால் உன்னை ஐயமறவுணர்ந்து, உன்னை வாழ்த்தும் வகையை அறியேன்

(3) இறைவனே! என் மனதிலுள்ள துன்பத்தை ஒழிக்க உன் திருவடியைத் தரிசிக்க அளித்த முதல்வனே! மோட்சம் அடைய உன் திருவருளைத் தந்தாய்

(4) வெள்ளையானைக்கு வரம் தந்தருளியவனும், திருக்கருவையில் எழுந்தருளியவனுமான ஈசனின் அரிய திருவடி மோட்ச நிலத்திற்கு ஒரு வழி. தாமரை மலர்க்கு ஒரு சூரியன் தவசிகளுக்கு கரும்புச்சாறு. பக்தர்களுக்கு கருணை மழை பொழியும் மேகம்

(5) அடியவர்கள் செய்த பிழையை நினையாதவன். திரிபுரத்தை அக்னியால் அழித்தவன். அவனை நினைக்கும் தோறும் என் கைகள் வணங்கும்.

(6) அடியார்களுடைய பிறவித் துன்பத்தை ஒழித்து அவர்களை முக்தி வீட்டில் குடியேற்றி அருள்புரிபவன் அடியேனுக்கும் அளவில்லாத அன்பு தந்தருள்பவன்

(7) அடியவர் செய்யும் தவமும், அத்தவத்தால் வரும் பயனுமாகிய இறைவனே! எல்லாப் புவனங்களுமா-வாய். எல்லா சிவராசிகளுமாவாய். போகங்களும் ஆவாய்

(8) உனது திருநாமங்களை எடுத்துக்கூறி, உன்னையே பணிந்து பூசை செய்யும் ஞானிகள் பொன்னுலகத்தைக் காக்க வரந்தந்தருளும் புனிதனே! குராமரநிழலில் எழுந்தருளிய இறைவனே! நான் சிவஞானியும் அல்லேன். தேவர்களுக்குத் தொண்டு செய்வோனும் அல்லேன். ஆகவே என் பிழையைப் பொறுத்துக்கொள்ள வேண்டுகின்றேன்.

(9) மதயானையின் தோலைப் போர்வையாகக் கொண்ட இறைவனே! வீணான பழக்கத்திற்கு ஆளாகி உன்னை நினையாது வாழ்ந்துவிட்டேன். இனி உன்னை நினைத்து வாழ அருள்புரிவாயாக.

(10) நல்லது, கெட்டது அறியாது, பெண்களை விரும்பி வாழ்ந்துவிட்டேன். உருகாதிருக்கும் என் மனதை நீ உருக்கி உன் திருவடியைப் புகழ்ந்து பாடவைத்த நிலையை எண்ணி மகிழ்ச்சியடைகின்றேன்.

---

## 7. ஏழாம்பத்து

(1) திருக்கழுவையில் எழுந்தருளிய இறைவனே! தெளியாத என் மனதைத் தெளிய செய்து, நீ அருளும் நிலையைக் காட்டி, என்னை அடிமை கொண்ட கருணா மலையே! இன்னும் எளியேன், பிறரையே விரும்பியே உன்னை வணங்காதிருக்கின்றேன்.

(2) இருக்கும் பொழுதும், நிற்கும் பொழுதும், உறங்கும் பொழுதும், உண்ணும் பொழுதும், பெண்களுடன் கூடி மனம் அழியும் பொழுதும் அடியேன் மனம் இறைவா உன்னிடமே.

(3) முருகக் கடவுளை தந்தருளியவனே. என் மனத்தினை உனக்குத் தந்தேன். உனது திருவருளை எனக்குத் தந்தாய். வணக்கத்தைத் தந்தேன். திருவடியைத் தந்தாய். மலர்களைத் தந்தேன். மோட்சத்தைத் தந்தாய்.

(4) தேவனே! உன்னைத் தவிர மற்றொரு தெய்வத்தை கனவிலும் நினையேன். என் இதயத்தே உன்னை வணங்கி-னேன்.

(5) எந்நாளும் தேவர்களும், முனிவர்களும் உன்னைக் கண்டறிகிலர். நாயினும் கடையவனாகிய நான் உன்னைக் கடல் சூழ்ந்த உலகம் முழுவதும் தேடினேன். இறுதியில் திருக்களா நிழலில் உன்னைக் கண்டு வணங்கினேன்.

(6) இழிந்த எனது மனமென்னும் பேய் செய்த பல செயல்களால் அறிவிழந்து இறைவனே உனது இயல்பை அறியாது வாழ்ந்து விட்டேன்.

(7) சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் ஆகிய ஐம்-புலன்களை அழித்து, அதனால் வினையும் நல்வினை தீவினைகளை வேரோடறுக்க மாட்டேன். எனக்குப் பிழைக்கும் வழியினை இறைவனே கூறுவாயாக.

(8) உலகிலுள்ள புறச்சமயங்களென்னும் கொடிய கடலில் வீழ்ந்திருந்து, கொடிய துன்பத்தில் வருந்துகின்ற எனக்கு உமையம்மையை இடப்பாகத்தில் வைத்துள்ள இறைவனே! திருக்கருணை நாதனே எனக்கு அருள்புரிக.

(9) இறைவன் என் மனதில் அதிசயத்தைக் காட்டி, உள்ளும் புறமும் தானாகவே நிற்கும் நிலைமையைக் காட்டி, வாயால் துதிசெய்ய நாவைக் காட்டி, இடையறா அன்பைக் காட்டி, மனதில் ஆனந்தக் களிப்பையுங் காட்டி என்னை ஆட்கொண்டான்.

(10) இறைவனே! நடுஇரவில் பரவையாரிடம் தூது சென்றவனே! இமய மலையில் தோன்றிய உமையம்மையின் கேள்வனே! அடியேனை அடிமைபூண்டு என்னை ஆட்கொள்வாயாக.

# 8. எட்டாம் பத்து

(1) திருக்கருவையாயுள்ள இறைவனுடைய புகழைப் பாட செல்வம், பொலிவு, புகழ், இன்பம், வெற்றி, சிவஞானம் மோட்சம் இவற்றையெல்லாம் தரும்

(2) திருமால், பிரம்மன் இவர்களால் அறிய முடியாத இறைவன் என் நெஞ்சத்தில் இருப்பவன்

(3) ஆயிரம் திருநாமங்களையுடைய திருக்கருவை இறைவனின் திருவடியை வணங்கும் அடியார் அவன் வாழும் திருக்கோவிலை வலம் வந்து வணங்கினால் மோட்சம் பெறுவர்

(4) மனமே! வற்றாத இறைவனுடைய அருளாகிய அருவியில் நீராடினால் நம்முடைய வருத்தங்களும் துன்பங்களும் நீங்கும்

(5) இறைவனே! மட்கலத்தை உருவாக்கும் குயவனின் சுழன்றாடும் சக்கரத்தையொத்து பல இடங்களில் அலைந்து செல்லும் என் மனம் கவலையைப் போக்க உன்னைச் சரணடையும்.

(6) எல்லாவற்றையும் ஆள்பவனே! உமையம்மையிடம் அன்புள்ளவனே! உன்னை தினமும் பூசித்திலேன் தூய சிவாகமத்தை வாசித்தல் செய்யேன். எப்பொழுதும் என் துயரம் நீங்கும் இறைவனே.

(7) எம் தலைவன் என்றும், பெருமானென்றும், ஈசனென்றும் ஒருமுறை சொல்வதற்கு முன்பே எல்லா நன்மைகளும் வந்து சேரும்.

(8) திருக்கருவையில் வீற்றிருக்கும் பெருமானும், கொன்றை மலர் மாலையை அணிந்த சடாமுடியை உடையவனுமாகிய இறைவன், தனது சிவந்த திருவடியை

என் தலையால் சூட்டுவதால் எமன் என்னை விட்டு நீங்கிச் செல்வான்.

(9) மூவகை ஆன்மாக்களை மலபந்தத்திலிருந்து நீக்கி, முக்தியாகிய சோலையில் எ.சுறும், தேவர்களுக்குத் தலைவனுமாகிய இறைவன் சேர்ப்பான்

(10) அண்டகோளமும், அகிலலோகமும் நிறைந்த சிவந்த தீப்பிழம்பின் வடிவாய் அமைந்தவனாகிய தாமரை மலர்போன்ற திருவடிகளையுடைய திருக்கழுவை இறைவனை வணங்க இரண்டு கண்களும் ஆனந்தம் அடையும்

—o—

## 9. ஒன்பதாம் பத்து

(1) துன்பத்தில் உழலும் மனமே! செந்தமிழ் வழங்கும் திருக்கழுவையிலுள்ள சிவபெருமானுடைய திருவடியை வணங்கினால் காண்பதற்கு அரிய சொர்க்கம் கிடைக்கும்

(2) இப்பிறவியில் இன்பத்தையும், மறுவில் முக்தியையும் தருபவனும், நம்மை ஆட்கொள்ள உரிமையுடையவனும் உமையம்மையோடு இருப்பவனுமாகிய இறைவனை நாம் எப்போது வணங்குவது?

(3) திரைச்சீலையால் மறைக்கப்பட்டு பாவைகளை ஆடச்செய்யும் பொம்மலாட்டம் போல, பாம்பினைக் கழுத்திலுள்ள இறைவன் உயிர்களுக்குப் புலப்படாது நின்று ஆடச்செய்ய, மக்கள் கூட்டமெல்லாம் ஆடாது நிற்கும்.

(4) பெருமானுடைய திருநடனம் செய்த திருவடிகளையும், அழகிய புன்னகையையும், வியர்வை அரும்பும்

திருமுகத்தையும், திருப்புருவங்களையும், கண்களையும் திருக்கரங்களையும் தரிசிப்பவர் இவ்வுலகத்தில் மீண்டு பிறக்காது மோட்சம் பெறுவர்.

(5) பெரிய கடல் சூழ்ந்த உலகத்தில் பிறந்த உடம்புகள் அளவில்லாதன. இறந்து போனமையால் அவற்றால் பெற்ற நன்மைகள் ஏதும் இல்லை.

(6) உள்ளதென்றும் இல்லதென்றும் கூறப்படும் பொருளை கூர்ந்து உணரமாட்டாத வஞ்சகர் நாவாற்குப் பொருந்தாத திருக்குருவையிலுள்ள திருக்கோயிலுள் யான் சென்று இறைவனைக் கண்டவுடனேயே எனது பேரின்ப வேட்கை தீர்ந்தது.

(7) திருக்குருவையில் எழுந்தருளியிருக்கும் மேலோனே! ஊன் மயமானதும், மூன்று மலங்களை உடையதும், உயிர் நீங்கிய பின் தொடத் தகாததுமான, சூத்திரப் பாவை போல்வதுமான இவ்வுடலை நான் சுமந்து திரிதலை ஒழித்து அருள் புரிவாயாக.

(8) பால்வண்ணப் பெருமானே! நரகத்தில் வீழ்ந்து வருந்தினாலும், உன்னிடத்தில் பக்தி கொள்வேனே தவிர அதிலிருந்து மீளமாட்டேன். வீடு பேற்றினையும் விரும்ப மாட்டேன். சித்திப் பேற்றினையும் விரும்பலன்.

(9) திருக்குருவை பெருமான் மீது வைத்திருக்கும் அன்பே சிறந்தது. சைவத்தைத் தவிர வேறு மதங்களை மறப்பது நல்லது. இவ்வுடம்பை பற்றியிருக்கும் பற்றினை விட்டொழிப்பது நல்லது.

(10) கறுத்த கண்டத்தை உடையவனே! கனி போல்பவனே. வெளிப்படாத உன்னை அறிந்து கொண்டேன்.

# 10. பத்தாம் பத்து

(1) பேரருளை தந்தவனே! நாய் போல் கிடைபட்ட எனக்கு உன்னை வாழ்த்த நா தந்தவனே. சந்திரனோடு, கங்கையையும் சடையில் தாங்கியுள்ளவனே. முப்புரங்களை அழித்துப் புன்னகை கொண்ட அழகனே உன்னைப் போற்றுகின்றேன்.

(2) உமாதேவி இடப்பாகத்தில் வாழும் இறைவனே! என் தீவினையாகிய பகையைப் போக்கியருளும் பாவநாசனே! திருஞான சம்பந்தர் புகழ்ந்து பாடிய திருக்களா நிழலமர் இறைவனே! உன்னை வணங்குகின்றேன்.

(3) யுகங்கள் முடியும் காலத்தில் ஏழுலகங்களையும் எரித்ததினால் அதனால் உண்டான சாம்பலை உடல் முழுதும் பூசிக்கொண்டு உமையம்மை காணும்படி கூத்தாடுகின்ற இறைவனே. உன்னை போற்றுகின்றேன்.

(4) குற்றமற்றவனே! தேவர்களால் அறிய முடியாதவனே! எனக்கு அறிவு தந்தருளிய ஞான சொரூபனே! களாமரத்தின் நிழலில் எழுந்தருளியிருக்கும் காலகாலனே! என் தந்தையானவனே! உன்னைப் போற்றி வணங்குகின்றேன்.

(5) எனக்குத் தந்தை ஆனவனே! ஆசிரியனே! தலைவனே! மேலானவனே! நல்ல சோதியே! பால்வண்ண முதல்வனே! வணக்கம்.

(6) நாள்தோறும் உன்னை வணங்குகின்றவர்களுக்குத் திருவருள் செய்யும் திருக்கருவைக் கடவுளே! தூது சென்றவனே! உன் புகழைப்பாடிய பாடல்களில் என் குறைகளை உரைத்ததில் ஒன்றேனும் உன் காதில் விழவில்லையா.

(7) தேவனே! கடவுளே! உன் திருவடிகளுக்கு வணக்கம்! என்னை ஆட்கொண்டருளும் அப்பனே!

தேவர்களுக்கு இறைவனே. உன் திருவடிகளுக்கு வணக்கம்!

(8) தேவனே! பிறருக்கு அடிமைப்பட்டிலேன். உனக்கே அடிமையானேன். உன்னைத் துதித்து நாள்தோறும் வணங்குகின்றேன்

(9) கொன்றை மலர்மாலை அணிந்த மார்பை உடையவனே. உமாதேவி காணும்படி நடனமாடியவனே. களாவனத்தில் எழுந்தருளிய இறைவனே! இவ்வுலகத்தைக் காப்பவனே உன்னைப் போற்றி வணங்குகின்றேன்.

(10) வெள்ளிய திருமேனியனே! அருட்கடலான ஐயனே! உன்திருவடிகளைத் துதிக்க அருள்புரிபவனே! திருக்கருவை நகரில் கோயில் கொண்டுள்ள இறைவனே உன்னை நான் என்றென்றும் போற்றி வணங்குவேன்.

இவ்வாறு திருக்கருவை நாதனின் பெருமைகளையும், சிறப்புகளையும் அதிவீரராம பாண்டியர் எடுத்துரைக்கின்றார்.